Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JUNE 17, 2021

வியாழக்கிழமை ஜூன் 17, 2021 | ஒளி: 07 கதிர்: 24 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE

கம்மன்பிலவுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்

'மொட்டு' ஆதரிக்காது; முதற்சுற்றில் 12 பேர் கையொப்பம்

எரிபொருள் விலை அதிகரிப்பை அடுத்து, வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களால் நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்று கொண்டுவரப்படவுள்ளது. அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிடல், எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (16) இடம்பெற்றது. முதல் சுற்றில், 12 எம்.பிக்கள் கையொப்பமிட்டுள்ளனனர். 10 விடயங்களை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்டுள்ள அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை, பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்படவுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

விக்டோரியாவுக்கு அருகில் நிலநடுக்கம்

கண்டி-திகனையில், விக்டோரியா அணைக்கட்டுக்கு அருகிலுள்ள குமரிகம பிரதேசத்தில் சிறியளவில் நிலநடுக்கும் உணரப்பட்டுள்ளது. நேற்று (16) மாலை 4.39 இந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டு உள்ளது.



தொடர்ச்சி P2

225ஆவது எம்.பியாகிறார் ஐ.தே.க தலைவர் ரணில்

கடந்த 10 மாதங்களாக 224 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இயங்கிய பாராளுமன்றத்துக்கு 225ஆவது உறுப்பினராக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். கட்சிக்குக் கிடைத்துள்ள ஒரேயொரு தேசிய பட்டியல், அவரூடாக நிரப்பப்படவுள்ளது. ரணில்

தொடர்ச்சி P2

'இன்று ஒன்று; நாளை 60 ஆகும்'

ஊடகங்களுக்குப் புரியாமல் விட்டதற்கு, மக்கள் நன்றாக விளங்கிக்கொள்வர் எனத் தெரிவித்த ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளரான முன்னாள் எம்.பி, பாலித ரங்கே பண்டார, இன்றைய ஒன்று; நாளை அறுபதாகும். கொஞ்சம் காத்திருங்கள் என, தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னிலையில் வைத்து ஊடகங்களுக்கு நேற்று (16) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

ஷானி அபேசேகரவுக்கு பிணை

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர, உப-பொலிஸ் பரிசோதகர் ஆகியோர், மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் நேற்று (16) பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். 25 ஆயிரம் ரொக்கம், தலா 1 மில்லியன் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளின் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

'மரமேறி விழுந்தவனை மாடேறி மிதித்துள்ளது'

ஜனாதிபதிக்கு, பேராயர் ரஞ்சித் ஆண்டகை கடிதம்

கொரோனா தொற்றால் நாட்டில் பயணக் கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில், மக்கள் தொழில்களுக்குச் செல்ல முடியாமல் வீடுகளிலேயே முடங்கியுள்ளனர். இவ்வாறான நெருக்கடிக்கு மத்தியில், எரிபொருள் விலை அதிகரிப்பு பாரிய சிக்கலைத் தோற்றுவித்துள்ளதென பேராயர் ரஞ்சித் மெல்கம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில்,

தொடர்ச்சி P2

சூரிய சக்தி மின் உற்பத்தித் திட்டங்களை மேம்படுத்த 100 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வழங்க இந்தியா இணக்கம்

சூரிய சக்தியிலான மின் உற்பத்தியை அதிகரித்து, தேசிய மின் கட்டமைப்புக்கு மீள்பிறப்பாக்கச் சக்திவளப் பங்களிப்பை அதிகரிக்கும் திட்டத்தை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



பறித்த கொழுந்தை பாதியில் கொட்டிய தொழிலாளர்கள்

பொறுப்பேற்க நிர்வாகம் மறுப்பு; ஜீவனின் பேச்சு வீணாய்ப் போச்சு

■ எஸ் .சதீஸ், கிருஸ்ணா

பொகவந்தலாவை, கொட்டியாகலை கீழ்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள், நேற்று (16) கொழுந்து பறிக்கச் சென்ற போதும், அவர்கள் பறித்த கொழுந்தைப் பொறுப்பேற்கவோ, களப் பணிக்குச் செல்லவோ தோட்ட நிர்வாகம் முன்வரவில்லை.

தொடர்ச்சி P2

'சிலரின் சுய இலாபங்களுக்காக நான் கைது செய்யப்பட்டேன்'

வவுனியா நகர சபைத் தலைவர் விளக்கம்

அரசியல் காரணங்களுக்காகவும் ஒரு சில அரசியல்வாதிகள் மற்றும் அவர்களுடைய சகாக்களுக்கான சுய இலாபங்களுக்காகவுமே தன்னைக் கைது செய்தனர் என, கைது செய்யப்பட்டு, பிணையில் விடுதலை செய்யப்பட்ட, வவுனியா நகர சபைத் தலைவர் தேசபந்து இராசலிங்கம் கௌதமன், தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

அத்தியாவசிய அனுமதிப்பத்திரம்

'காலாவதியாகும்'

பயணக்கட்டுப்பாடு அமல்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில், அத்தியாவசியப் பொருள் விநியோகத்துக்காக, வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரங்கள், எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமையுடன் காலாவதியாகுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். குறித்த அனுமதிப்பத்திரங்கள் 14 நாள்களுக்கே செல்லுபடியாகும். இந்நிலையில்,

தொடர்ச்சி P2

இராமேஸ்வரத்தில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

இலங்கை மீன் வளத்துறை அதிகாரிகளால், பயன்பாட்டில் இல்லாத பஸ்கள், மீன்பிடிக் கடற்பரப்பில் போடப்படுவதைக் கண்டித்து, இராமேஸ்வரம் மீனவர்களால், இராமேஸ்வரம் பஸ் நிலையத்துக்கு முன்னால், நேற்று (16) காலை, ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கருத்துத் தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், தமிழக மீனவர்களின் மீன்பிடித் தொழிலைத் தொடர்ந்து பாதிப்புக்குள்ளாக்கும் வகையில், இலங்கை அரசாங்கத்தால், கச்சதீவு, நெடுந்தீவு, நயினாதீவு ஆகிய கடற்பகுதிகளில், பயன்பாட்டில்

தொடர்ச்சி P2

இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவர் ஜூலி ஜியோ

இலங்கை- மாலைத்தீவுக்கான அமெரிக்காவின் புதிய தூதுவரை நியமிக்க அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தீர்மானித்துள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. தற்போது இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக அலெய்னா பி ரெப்லிட்ஸ் பணியாற்றி வரும் நிலையில், இவருக்கு பதிலாகவே ஜூலி ஜியோ சுன் என்பவரை நியமிக்க அமெரிக்க ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். நியமனம் எப்போது நடைமுறைக்கு வரும் என்பது குறித்த தகவல் வெளியாகாத

தொடர்ச்சி P2

கல்வியகத்தில் 36 பேருக்கு கொரோனா

■ ஷேன் செனவிரத்ன

கட்டுக்கஸ்தோட்டை பொலிஸ் பிரிவில், தனிமைப்படுத்தல் விதிகளை மீறி, முன்னெடுக்கப்பட்ட கல்வியகத்தின் முகாமையாளர், ஆசிரியர்கள் நால்வர் உட்பட, மாணவ, மாணவிகள் 36 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

அதில், மாணவிகள் 20 பேர், பின்னவல சிகிச்சை மத்திய நிலையத்துக்கும் மாணவர்கள் 16 பேரும் பொல்கொல்ல சிகிச்சை மத்திய நிலையத்துக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், அந்த கல்வியத்துக்கு வந்து சென்ற, ஏனைய மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளின் பிரகாரம் மேலும் ஐந்து மாணவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.

இதுவரை 92 உறவுகள் உயிரிழப்பு

■ க. அகரன்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி போராட்டம் மேற்கொண்டு வருபவர்களில், இதுவரை 92 உறவுகள் உயிரிழந்துள்ளனரென தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு தமது உறவுகளைத் தேடியலைந்து 92 உறவுகள் நோயால் பீடிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். அவர்களில், 12 பேர் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

PAGE 1 தொடர்ச்சிகள்

கம்மன்பிலவுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்

அதற்கமைய,

1. அரசியலமைப்பின் பிரகாரம் பாராளுமன்றத்துக்கு கூட்டாக பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ள நிலையில், அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் கடிதம் மூலம் குறிப்பிட்டுள்ளமைக்கு அமைய, அமைச்சரவையின் அனுமதியின்றி வலுசக்தி அமைச்சர் உதய பிரபாத் கம்மன்பிலவால் எரிபொருள் விலையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2. அரச கொள்கை நடவடிக்கை கோட்பாடு மீறப்பட்டுள்ளதுடன், அடிப்படை கடமைகளைத் தவிர்த்தல் அதற்கமைய, உறுதிமொழியை மீறியுள்ளமை;

3. உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவாக காணப்பட்ட காலப்பகுதியில் எரிபொருள் விலையைக் குறைக்காமல் இலங்கை எரிபொருள் கூட்டுதாபனம், அரசாங்கத்துக்கு கிடைத்த இலாபத்தை மக்களுக்கும் பாராளுமன்றத்துக்கும் தெளிவுப்படுத்தாமை;

4. உலக சந்தையில் எரிபொருள் விலை குறைந்தமைக்கான இலாபத்தை மக்களின் அத்தியாவசிய பொருள்களை குறைத்து வழங்குவதாக முன்வைத்த வாக்குறுதியை நிறைவேற்றாமை;

5. அதன் விலை பலனை அடிப்படையாக வைத்து, இரண்டு வருடங்களுக்கு எரிபொருள் விலை அதிகரிக்கப்படாது என்ற வாக்குறுதியை நிறைவேற்றாமை;

6. அதன் விலை குறைவின் இலாபத்தை எரிபொருள் விலை அதிகரிக்கும் போது பயன்படுத்துவதற்காக அரசாங்கத்தால் ஸ்தாபிக்கப்பட்ட நிதியத்துக்கு என்ன நடந்தது என்பதை பாராளுமன்றத்தும் மக்களுக்கும் தெரிவிக்க பின்வாங்கியமை;

7. இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனம் அரச வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய கடனை செலுத்த நடவடிக்கை எடுப்பதான வாக்குறுதியை நிறைவேற்றாமை;

8. எரிபொருள் விலையேற்றத்துடன் அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிப்பானது கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியமை;

9. உற்பத்திச் செலவு அதிகரிப்பால் ஏற்றுமதிக்கு பாதகமான அழுத்தம் ஏற்பட்டுள்ளமை;

10. அரசாங்கத்தை அமைக்கும் போது வழங்கப்பட்ட மக்கள் ஒழுங்குப்பத்திரம், அரசியலமைப்பை நேரடியாக, மறைமுகமாக மீறியமை போன்ற காரணங்களால் வலுசக்தி அமைச்சர் தொடர்பில், இந்தச் சபை முழுமையாக நம்பிக்கை இழந்துள்ளதாகவும் எனவே அவர் தொடர்ந்தும் அமைச்சராக இருப்பதற்கு தகுதியற்றவர் எனத் தெரிவித்து, இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கையெழுத்திடப்பட்டுள்ளது.

அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு, தாங்கள் ஒருபோதும் ஆதரவளிக்க மாட்டோமென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது. இதேவேளை, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளில் பல, அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு ஆதரவாக குரல் கொடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

விக்டோரியாவுக்கு அருகில் நிலநடுக்கம்

“இந்நிலநடுக்கம் 1.94 மெக்னெடிக் அளவில் பதிவாகியுள்ளது. இதனால், எந்தவிதமானப் பாதிப்புகளும் இல்லை” எனவும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் அறிவித்துள்ளது.

கண்டி மாவட்டத்திலும் திகனை, விக்டோரியாக நீர்த்தேக்கத்தை அண்மித்த பிரதேசங்களிலும். அவ்வப்போது, நிலநடுக்கம் உணரப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

225ஆவது எம்.பியாகிறார்...

அவர், எதிர்வரும் 22ஆம் திகதியன்று, எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்துகொள்வார் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 23ஆம் திகதியன்றே சத்தியப்பிரமாணம் செய்துகொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

16ஆவது பாராளுமன்றத்துக்கான தேர்தல், 05.08.2020 அன்று நடைபெற்றது. அதில், ஐக்கிய தேசிய கட்சி படு தோல்வியடைந்தது. எனினும், ஒரேயொரு தேசிய பட்டியல் மட்டுமே கிடைத்திருந்தது.

அந்தப் பட்டியலுக்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பில் கட்சிக்குள் கடுமையான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. எனினும், கட்சியின் தலைவரை அனுப்புவதென, கட்சியின் செயற்குழுவின் ஊடாக இறுதி செய்யப்பட்டது. அதனடிப்படையிலேயே ரணில் விக்கிரமசிங்க எம்.பியாக பதவியேற்கவுள்ளார்.

‘இன்று ஒன்று; நாளை 60 ஆகும்’

ஐக்கிய தேசிய கட்சிக்கு கிடைத்திருந்த தேசிய பட்டியலை நிரப்புவதற்கான கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பெயர், அடங்கிய ஆவணங்களை தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் நேற்று (16) கையளிக்கப்பட்டன.

“இன்று ஒன்று; நாளை அறுபதாகும் என்பது மிகவும் இலகுவான விடயமாகும். அரசாங்கம் மற்றும் எதிரணியினருடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்த அறுபதும் இன்னும் அதிகரிப்பதற்கு வாய்ப்புகள் அதிகமே உள்ளன” என்றார்.

“வெறும் 42 உறுப்பினர்களை மட்டுமே வைத்துக்கொண்டு ஆட்சிபீடமேறி, அரசியலமைப்பில் திருத்தத்தையும் கொண்டுவந்து, வரவு-செலவுத்திட்டத்தையும் சமர்ப்பித்து நிறைவேற்றிக்கொள்ள முடியுமெனில், ஒன்றிலிருந்து பயணத்தை ஆரம்பித்து அவ்வளவு கடினமானது அல்ல” என்றார்.

ஷானி அபேசேகரவுக்கு பிணை

தங்களுக்கு பிணை வழங்காமல், நிராகரித்து கம்பஹா மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக ஷானி அபேசேகர தாக்கல் செய்திருந்த திருத்த மனுவை ஆராய்ந்ததன் பின்னரே, மேன்முறையீட்டு நீதிமன்றம் மேற்கண்டவாறு கட்டளையிட்டுள்ளது.

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், போலியான சாட்சிகளை தயார் செய்தனர் என்றக் குற்றச்சாட்டின் கீழ், ஷானி அபேசேகர மற்றும் சுகத் மெண்டிஸ் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர். அவ்விருவரம் கம்பஹா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பிணை வழங்கப்பட்டமைக்கான ஆவணங்கள் கம்பஹா நீதிமன்றத்தில் முன்வைக்காமையில், அவருடைய விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

‘மரமேறி விழுந்தவனை மாடேறி மிதித்துள்ளது’

ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடித்தத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளதாவது,

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் மீன் வளங்கள் அழிவடைந்து பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. அந்தக் கப்பலால் கடல் வளம், சுற்றாடல் மீன் வளத்துக்கு ஏற்பட்ட பாதிப்பைக் கணக்கிடக் கூட முடியாத நிலையில் உள்ளது. இந்நிலையில், எரிபொருள் விலை அதிகரிப்பு, மீனவர்களின் வாழ்வில் மேலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த எரிபொருள் விலையானது. ‘மரத்திலிருந்து விழுந்தவனை மாடேறி மிதிப்பது’ போன்ற செயலென தெரிவித்துள்ள அவர், கொரோனா தொற்றாலும் தீப்பற்றியெரிந்த கப்பலால் ஏற்பட்ட பாதிப்பாலும் எரிபொருள் விலையேற்றத்தாலும் ஆயிரக்கணக்கான மீன்பிடிக் குடும்பங்கள் அநாதைகளாக்கப்பட்டு உள்ளன.

எரிபொருள் விலையை அதிகரிப்பது அவசியம் தான். ஆனால், இது இப்போது செய்யப்பட்டிருக்கக் கூடிய செயலல்ல. எனவே, இத்தீர்மானம் நியாயமான ஒன்றல்ல என்பது தெளிவாக விளங்குவதாகவும் இதனால் பலரது வாழ்க்கை சிக்கலை எதிர்நோக்கியுள்ளதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இவ்வாறான விலையேற்றங்களால் வறுமையின் பீடிக்கப்பட்டுள்ள மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாகவும் இதற்கு முன்னைய அரசாங்கம் இவ்வாறு எரிபொருள் விலையை அதிகரித்த போது மீன்பிடி சமூகத்தினருக்கு நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுத்திருந்தது. ஆகையால், மேற்படி விவகாரம் தொடர்பில் ஜனாதிபதியும் அரசாங்கமும் கவனம் செலுத்த வேண்டுமெனவும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பறித்த கொழுந்தை...

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபாய் சம்பளம் அதிகரிப்பு வழங்கப்பட்ட நாள் தொடக்கம் குறித்த தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்களை நாளொன்றுக்கு, 18 கிலோகிராம் கொழுந்தைப் பறிக்குமாறும் வலியுறுத்தியதுடன் வாரத்தில் ஒருநாள் வேலை மாத்திரமே வழங்கப்பட்டதாகவும் தொழிலாளர்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் (15) தோட்ட நிர்வாகத்துடன் கலந்துரையாட வீடமைப்பு மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் கொட்டியாகல தோட்டத்துக்கு வருகைத் தந்த போதிலும் தோட்ட நிர்வாகம் இக்கலந்துரையாடலுக்கு வருகைத் தராத்தால், தொழிலாளர்களை வழமைப் போல் கடமைகளில் ஈடுபடுமாறு, ஜீவன் தொண்டமான் வேண்டுகோள் விடுத்தார்.

இந்த நிலையில், தொழிலாளர்கள் நேற்று வழமைப்போல் தொழிலுக்கு சமூகமளித்திருந்த நிலையில், தோட்ட உத்தியோகத்தர்கள் எவரும் களப் பணிக்கு செல்லவில்லை என்பதுடன், தொழிலாளர்களால் பறிக்கப்பட்ட கொழுந்தையும் நிர்வாகம் பொறுப்பேற்கவில்லை.

இதனால் தாம் பறித்த கொழுந்துகளை தேயிலை தொழிற்சாலை முன்பாக வைத்துவிட்டு தொழிலாளர்கள் வீடு திரும்பியுள்ளதுடன், தமது பிரச்சினைக்கு சம்பந்தபட்டவர்கள் உரிய தீர்வை வழங்க வேண்டுமென்றும் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

100 மில்லியன் அமெரிக்க டொலர்...

அரச கட்டடங்கள், சமய ஸ்தாபனங்கள், குறைந்த வருமானம் பெறும் வீடுகளின் பங்களிப்பைப் பெற்று, சூரிய மின்சக்தியை உற்பத்தி செய்வதே அரசாங்கத்தின் முக்கிய திட்டமாகும். இதன்மூலம் குறைந்த வருமானம் பெறும் வீடுகளுக்கான பொருளாதார நன்மைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் அரச நிறுவனங்களில் மின்சாரத்துக்காக செலவாகும் அதிக தொகையைக் குறைப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்காக, இந்திய அரசாங்கமானது, இந்திய ஏற்றுமதி, இறக்குமதி வங்கியின் ஊடாக 100 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை (Line of Credit) வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதுடன், இதற்கான இரு தரப்பு கடன் ஒப்பந்தமும் செய்துகொள்ளப்பட்டுள்ளது என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கடன் ஒப்பந்தம், ஜனாதிபதி அலுவலகத்தில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மின்சக்தி இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க ஆகியோரின் முன்னிலையில், இலங்கை அரசாங்கத்துக்கும் இந்திய ஏற்றுமதி, இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இவ்வொப்பந்தம் தொடர்பிலான ஆவணம், நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆடிகல, இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோருக்கு இடையில் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

காணித் தட்டுப்பாட்டைத் தவிர்க்கும் வகையில், நீரில் மிதக்கும் சூரிய மின்சக்தி முறைமைகளை நிறுவுவதும் இதில் உள்ளடங்கும். இதன் முதற்கட்டமாக, பாராளுமன்றத்துக்குத் தேவையான மின்சாரத்தை, தியவன்னா ஓயாவை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்படவுள்ளது. அத்துடன், தேசிய மின் கட்டமைப்புக்கு பிரவேசிக்க முடியாதிருக்கும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு, மின்கலங்களின் மூலம் சூரிய மின்சக்தி களஞ்சிய வசதிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அந்த ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

‘சிலரின் சுய இலாபங்களுக்காக...

“வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு, நேற்று (நேற்று முன்தினம்) அழைக்கப்பட்டு 6 மணித்தியாலங்கள் வரை தடுத்து வைக்கப்பட்டு பின்னர் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுதலை செய்யப்பட்டேன். இந்தக் கைது மற்றும் விடுதலை ஆகியவற்றில் பொலிஸார் சுயாதீனமாக செயற்படவில்லை. அவர்களுக்கான அழுத்தங்களின் பிரகாரமே செயற்பட்டனர். அத்தோடு, இது ஒரு திட்டமிடப்பட்ட கைதாகவே நான் கருதுகிறேன்” என்றும் தெரிவித்துள்ளார்.

“நகர சபைக்குச் சொந்தமான இடத்திலேயே வாடிவீடு உள்ளது. அந்த இடம் யாருக்கும் குத்தகை அடிப்படையில் தற்போது வழங்கபபடவில்லை. அத்துடன், ஏற்கெனவே முகாமைத்துவம் செய்தவரால் 12 இலட்சம் ரூபாய் வாடகைப் பணம் இதுவரை நகர சபைக்கு வழங்கப்படவில்லை. அதற்கான கடிதங்கள் பல அனுப்பப்பட்டும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் நகர சபையின் உயர் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் நிலைமைகளை பார்வையிடுவதற்காகவும், வாடகை பணம் செலுத்தாமை தொடர்பான அறிவித்தலை ஒட்டுவதற்காகவும் அங்கே சென்றிருந்தோம். அங்கே உள்ளவர்களை விசாரித்த வேளையில் அவர்கள் அரசியல் கட்சிகள் சார்ந்தவர்களாகவும், வாடி வீட்டுடன் சம்பந்தவற்றவர்களாகவும் காணப்பட்டனர்.

அவர்களை வாடி வீட்டை விட்டு வெளியேறுமாறு கூறியோதோடு, வாடகை செலுத்தாமை தொடர்பான அறிவித்தலை ஒட்ட முற்பட்ட வேளையில் நகர சபை ஊழியர்களோடு முரண்பட்டதோடு, அரசாங்க ஊழியர்களான நகர சபை அதிகாரிகளை, அவர்களது பணிகளை செய்யவிடாமல் தடுத்தார்கள்.

வாடி வீட்டு பிரச்சினை எழுந்து, மூடப்பட்டு இருந்த கடந்த காலங்களில், நகர சபைக்குச் சொந்தமான இந்த இடத்தினை அரசியல் கட்சியொன்று தனது அரசியல் பணிகளுக்காகவும், தேர்தல் பணிகளுக்காகவும் பாவித்து வந்தமையை இங்கே சுட்டிக்காட்டுகிறேன் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராமேஸ்வரத்தில்...

இல்லாமல் கைவிடப்பட்ட இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்கள் இறக்கப்படுகின்றன என குற்றஞ்சாட்டினர்.

இவ்வாறு பஸ்கள் கடலில் இருக்கும் போது, கடல் மாசுபடுவதுடன், தமிழக மீனவர்கள் இந்தியக் கடற்பரப்பில் மீன் பிடித்தாலும், அவர்கள் விரிக்கும் மீன்பிடி வலைகள் காற்றின் வேகம் காரணமாகவும் கடல் நீரோட்டம் காரணமாகவும், இலங்கைக் கடற்பகுதிக்கும் செல்லக் கூடும்.

இதனால் படகுகள், வலைகள் சேதமடைந்து, படகு ஒன்றுக்கு பல ஆயிரம் ரூபாய் நட்டம் ஏற்படும் என்பதால், உடனடியாக இலங்கை மீன் வளத்துறை, இந்தத் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்றும், அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இலங்கைக்கான அமெரிக்காவின்...

நிலையில், இலங்கையுடன் சேர்த்து 09 நாடுகளுக்கான தனது தூதுவர்களை மாற்ற அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடேன் நடவடிக்கை எடுத்துள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

‘காலாவதியாகும்’

பயணக்கட்டுபாடு கடந்த 14ஆம் திகதிக்குப் பின்னரும் நீடிக்கப்பட்டுள்ளதால், குறித்த அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் 21ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்றார்.

என்னை விமர்சிப்பவர்களுக்கு

‘முதுகெலும்பு இல்லை’

ஜனாதிபதி, பிரதமரின் இணக்கப்பாட்டுடன் எடுக்கப்பட்ட தீர்மானமொன்றுக்கு, தன்னை மாத்திரம் சிலர் விமர்சிப்பதாகத் தெரிவிக்கும் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் பெயர்களைக் கூறி, அவர்களை விமர்சிப்பதற்கு முதுகெலும்பு இல்லாதவர்களே இவ்வாறு தன் மீது விமர்சனங்களை முன்வைக்கின்றனர் என்றார்.

வலுசக்தி அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு மேலும் கருத்துரைத்த அவர், எரிபொருள்களின் விலை அதிகரிப்புத் தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை அறிவித்து, வரலாற்றில் வேறெந்த அமைச்சர்களும்

முகங்கொடுத்திராத சவாலுக்கு நான் முகங்கொடுத்துள்ளேன். அரசாங்கத்தைப் பாதுகாப்பது, அரசாங்கத்தில் உள்ள சிலருக்குப் பிரச்சினை என்றால், அரசாங்கத்தின் எதிரிகள் அரசாங்கத்துக்குள்ளேயே இருப்பது இதனூடாகத் தெளிவாகின்றது.

எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படாதிருந்தால், நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, வாழ்க்கைச் செலவும் பல மடங்கு அதிகரித்து இருக்கும். எரிபொருள்களின் விலை அதிகரிப்புத் தொடர்பில், என்னை விமர்சிப்பவர்கள், அதற்கான மாற்றுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும்.

இதேவேளை, உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்தமையால் நாட்டில் எரிபொருள் விலை அதிகரிக்கப்படவில்லை. நாட்டுக்குக் கிடைத்து வந்த அந்நியச் செலாவணியில் ஏற்பட்ட பற்றாக்குறை காரணமானவே, எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டது. இதுவே எரிபொருள்களின் விலை அதிகரிப்புக்குப் பிரதான காரணம் எனவும் தெரிவித்தார்.

உரப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு அவசியம்

அமைச்சரவையில் வலியுறுத்து

நாடுமுழுவதிலும் ஏற்பட்டுள்ள உரத் தட்டுப்பாடு காரணமாக, விவசாயிகள் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருவதாக இவ்வாரம் நடைபெற்ற அமைச்சரவையில் பல அமைச்சர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள உரப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணப்படவில்லை என்றால் பாரதூரமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படுமெனவும் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி காரியாலயத்தில் பிரதமர் தலைமையில் நடைபெற்ற வாராந்த அமைச்சரவைச் சந்திப்பிலேயே அமைச்சர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளதோடு, உரப் பிரச்சினையை எதிர்நோக்கும் விவசாயிகள், அமைச்சர்களைச் சந்தித்து தங்களது பிரச்சினைகளைக் கூறிவருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, பந்துல குணவர்தன, ரமேஷ் பத்திரண, ஜனக பண்டார தென்னகோன், மஹிந்த அமரவீர, வாசுதேவ நாணயக்கார, எஸ். எம். சந்திரசேன ஆகிய அமைச்சர்கள் உரப் பிரச்சினை தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடி உள்ளனர்.

உரப் பிரச்சினை தொடர்பில் அமைச்சர்களுக்குப் பதிலளித்த அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கம, நாட்டுக்குத் தேவையான உரம் நாட்டுக்குள் இருப்பதாகவும், சந்தைகள் உரங்களைப் பதுக்கி வைத்திருப்பதாலேயே நாட்டில் உரத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அறிவுறுத்தல்கள் கிடைத்தால்

‘பாடசாலைகளை திறப்பேன்’

சுகாதாரப் பிரிவின் அறிவுறுத்தல்கள் கிடைத்தால், உடனடியாகப் பாடசாலைகளைத் திறக்கத் தயாராக இருப்பதாக, கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களுக்கு அமையவே பாடசாலைகள் மீளத் திறக்கப்பட வேண்டும். பாடசாலைகளை மீளத் திறப்பதற்கு முன்னர், ஆசிரியர்கள் உள்ளிட்டோருக்கு கட்டாயம் தடுப்பூசிகள் செலுத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் பாடசாலைகளை மீளத் திறக்க



வேண்டுமெனக் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருவதாகவும், பாடசாலைகளை மீளத் திறப்பது தொடர்பில் தற்போது கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

சதித்திட்டத்துக்கே ஐ.ம.ச உருவாக்கம்

தெரிந்தே ஐ.தே.கவில் இணைந்தோம்

சதித்திட்டமொன்றுக்கு அமையவே, ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டு உள்ளதைத் தெரிந்து கொண்டதாலேயே அக்கட்சியிலிருந்து விலகி, மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்து கொண்டதாக, ஐ.தே. கவில் மீள இணைந்துள்ள உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் 16 பேரும் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் கம்பளையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியினர், எங்களைத் தவறாக வழிநடத்தி வந்திருப்பதைத் தற்போது நன்றாகத் தெரிந்து கொள்ள முடிந்துள்ளது.

இந்த உண்மையை விளங்கிக்கொண்டு, ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து சென்ற ஏனையோரும் அக்கட்சிக்கு மீண்டும் திரும்ப வேண்டும் என, அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொரோனா மரணங்கள் குறைய

‘மூன்று வாரங்கள் செல்லும்’

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை குறைவடைந்திருந்த போதிலும், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி, உயிரிழப்போரின் எண்ணிக்கை குறைய இன்னும் மூன்று வாரங்கள் செல்லுமென இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்ணான்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் எண்ணிக்கை குறைவடைந்திருப்பது தெளிவாகத் தெரிவதாகவும், நாட்டில் பயணக்கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டிருப்பது நல்லதெனவும் அவர் தெரிவித்தார்.

எனினும், பயணக்கட்டுப்பாடுகளால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆரம்பத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. தற்போது தொற்றாளர்களின் எண்ணிக்கைக் குறைவடைந்துள்ளது. ஆனாலும் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்போரின் எண்ணிக்கை குறைவடைய இன்னும் 3 வாரங்கள் செல்லும் என்றார்.

கொரோனா வைரஸின் புதிய திரிபால், தொற்றுக்குள்ளாகுவோர் 10 நாள்களுக்குள்ளேயே உயிரிழக்க வாய்ப்புகள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

போதைப்பொருள் விற்பனை

ஒரே குடும்பத்தில் நால்வர் கைது

12 இலட்சம் ரூபாய் பெறுமதியான 67 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அக்கா, சகோதரி, தம்பி, அவர்களது உறவு முறைப்பெண்ணும் சபுகஸ்கந்த பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பயணக்கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டுள்ள நிலையில், சபுகஸ்கந்தவை சந்தியில் பொலிஸ் சோதனைச் சாவடியை கடக்க முயன்ற ஒட்டோ ஒன்றை நிறுத்தி, பொலிஸார் சோதனை செய்ததில், ஒட்டோவின் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்த பெண்ணின் கைப்பையிலிருந்த ஹெரோயின், போதைப்பொருள் தயாரிப்புக்காகப் பயன்படுத்தப்படும் பொருளொன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதுதொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில், பேலியகொட, பொரணுவத்த எனும் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் போதைப்பொருள் தயாரிப்பில் ஈடுபட்டுவந்த ஒரே குடும்பத்தினரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் குற்றத்துக்காக சிறைச்சாலையில் உள்ள பிரதான போதைப்பொருள் வர்த்தகராலேயே இந்தப் போதைப்பொருள் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவில்

பியூமி ஹங்சமாலி முறைப்பாடு

தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி பிறந்தநாள் நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்த, சந்திமால் ஜயசிங்க, பியூமி ஹங்சமாலி ஆகிய இருவரும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறியதாகக் கைது செய்யப்பட்டிருந்த இருவருக்கும் பிணை வழங்கப்பட்டிருந்த நிலையில், இச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த 21 பேரையும் 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்காக

அழைத்துச் செல்லப்பட்டிருந்த சம்பவம் தொடர்பிலேயே அவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை, தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டிருந்த பியூமி ஹங்சமாலி, சந்திமால் ஜயசிங்க உள்ளிட்ட 21 பேருக்கும் மேற்கொள்ளப்பட்டப் பி.சி.ஆர் பரிசோதனைகளில் அவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

திட்டமிடப்படாத விலை ஏற்றம்

மக்களின் வாழ்வில் பாரிய சுமை

அரசாங்கத்தின் திட்டமிடப்படாத வேலைத்திட்டங்களால் நாடு மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, திடீரென பாரியளவில் எரிபொருள்களின் விலையை அதிகரித்தால், வாழ்க்கைச் செலவும் அதிகரிக்குமெனவும் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு மேலும் கருத்துரைத்த அவர், நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியில் இருந்தபோது, விலைச் சூத்திரம் காணப்பட்டதால், தொடர்ந்து

எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்காது, குறைவாகக் காணப்பட்டதாகவும், ஆனால், தற்போதைய அரசாங்கம் திடீரென எரிபொருள்களின் விலையைப் பாரியளவில் உயர்த்தி உள்ளதாகவும் தெரிவித்தார்.

எரிபொருள்களின் விலை அதிகரிப்பால், பஸ் கட்டணங்கள், உணவுப் பொருள்களின் விலைகளும் அதிகரிக்குமெனவும், இதனால் மக்களின் வாழ்க்கைச் செலவும் அதிகரிக்குமெனவும் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா, ஆட்சிக்கு வந்தால் இலவசமாக உரம் வழங்கப்படுமென தெரிவித்த அரசாங்கம், தற்போது உரத்திலும் ஊழல் செய்துவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதிபர், ஆசிரியர்கள் பெற்றுள்ள

‘வங்கிக் கடன்களுக்கு சலுகை வழங்கவும்’

பிரதமரிடம் இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கோரிக்கை

அதிபர், ஆசியர்களால் வங்கிகளில் பெறப்பட்டுள்ள கடன்களுக்கான சலுகையை, நிதியமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வழங்க வேண்டுமென, இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கோரிக்கை விடுத்துள்ளதென, அச்சங்கத்தின் உப தலைவர், சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தலால் பாடசாலைகள் சுமார் மூன்று மாதங்கள் மூடப்பட்டுள்ள நிலையில், மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கை இணையம் மூலம் வழங்கப்படுகின்றது.

இதற்குத் தேவையான கருவிகள், டேட்டாக்களை, அரசாங்கத்தின் உதவியின்றி, தனிப்பட்ட ரீதியில் ஆசிரியர்கள் கொள்வனவு செய்து கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றமையால் அவர்கள் சிக்கல்களை எதிர்நோக்குவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, பல்வேறு வங்கிக் கடன் திட்டங்களால் பெறப்பட்டுள்ள கடன்களுக்கு சலுகை வழங்குமாறு, பிரதமருக்கு, இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கடிதம் அனுப்பியுள்ளது.

இதன்படி, இந்த மாதத்திலிருந்து மீண்டும் பாடசாலைகள் திறக்கும் வரை, வங்கிக் கடன்களுக்கான மாதாந்த தவணைகளையும் அதற்கான வட்டியையும் திருப்பிச் செலுத்த வேண்டாம் என்ற நிபந்தனையின் அடிப்படையில் கடன் தள்ளுபடி செய்யுமாறு அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

ஏழைகளின் கண்ணீரில்

அரசாங்கம் சவாரி செய்கிறது'

■ சகா, எஸ்.கார்த்திகேசு

எரிபொருள் விலையேற்றத்தினூடாக இந்த அரசாங்கம் ஏழைகளின் கண்ணீரில் சவாரி செய்கிறது எனத் தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன், நாட்டு மக்களைப் படுகுழியில் தள்ளுகின்ற வேலையை அரசாங்கம் செய்து கொண்டிருக்கின்றது எனவும் தெரிவித்தார்.

கொரோனா அசாதாரண நிலைமையால் பாதிப்புற்ற பொத்துவில் மக்களுக்கு, உலர் உணவுப் பொதிகள் வழங்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், ஏனைய நாடுகளைவிட இலங்கையில் பெற்றோல் விலை குறைவென்று அரசாங்கம் கூறுகின்றது.

எனினும், மற்றைய நாடுகளில் இருக்கின்ற அரிசி, மா ஏனைய உணவுப் பொருட்களுடன் ஒப்பிடுகையில் நமது நாட்டில் அவற்றின் விலை அதிகமாக இருக்கின்றது.

இங்கு எரிபொருளின் விலையேற்றம் என்பது தனியே எரிபொருளுக்கு மாத்திரமல்ல; எரிபொருளைப் பயன்படுத்துகின்ற போக்குவரத்தில் இருந்து, உணவுத் தயாரிப்பு என எல்லாவற்றிலும் விலை அதிகரிப்பு இடம்பெறும். தற்போது எரிவாயுவுக்கான விலையும் அதிகரிக்க இருப்பதாகவும் தகவல்கள் இருக்கின்றன.

எனவே, மக்களின் உணவிலும் வாழ்க்கையிலும் அரசாங்கம் கை வைத்திருக்கின்றது. இந்த அரசாங்கமானது மூழ்கும் நிலையிலுள்ள கப்பலுக்குச் சமமானதாகவே இருக்கின்றது என்றார்.

இதேவேளை, இதன்போது உடன் இருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், "ஒரு சீரான அரசியலைச் செய்ய முடியாத தலைவர்களாக, இந்த நாட்டின் தலைவர்கள் தத்தளித்துக் கொண்டிருக்கின்றார்கள். மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தும் பொய்யானவை என்பதை அவர்கள் நிரூபித்துக் கொண்டிருக்கின்றார்கள்" எனத் தெரிவித்தார்.

வவுனியா பொலிஸாருக்கு எதிராக

'முறைப்பாடு'

■ க. அகரன்

வவுனியா பொலிஸாருக்கு எதிராக, பொலிஸ் சேவை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாக, வவுனியா நகர சபை தவிசாளர் இ.கௌதமன் தெரிவித்தார்.

வவுனியாவில், நேற்று (16) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், எந்தவித முன்னறிவித்தலுமின்றி தன்னை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து, பொலிஸார் கைது செய்தனரெனவும் பொலிஸாருடைய இச்செயற்பாடு பக்கசார்பான செயற்பாடாகவே இருந்ததெனவும் குற்றஞ்சாட்டினார்.

அத்துடன், தமது உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்ததாக தொடரப்பட்ட வழக்கு தொடர்பாக, பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், இது தொடர்பாக பொலிஸ் சேவை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவித்த அவர், வடமாகாண ஆளுநர், மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு பதிவு செய்யவுள்ளதாகவும் கூறினார்.

அத்துடன், குறித்த விடுதியினூடாக நகர சபைக்கு சேரவேண்டிய மிகுதிப் பணத்தை நீதிமன்றத்தின் ஊடாக பெற்றுக்கொள்வதற்கு தீர்மானித்துள்ளோம். மேலும், வாடிவீடு என்பது நகர சபையின் சொத்து. அதனை முழுமையாக பெற்றுக்கொள்வதற்கான தீர்மானங்களையும் எடுத்துள்ளோம் என்றார்.

கைக்குண்டு மீட்பு

மட்டக்களப்பு, கிரான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சந்தியாறு, அம்பூஸ்குடா பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் ஜே.ஆர் ரக கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலை அடுத்து, வாழைச்சேனை காகித ஆலை பகுதியில் வாழைச்சேனை பொலிஸார் குறித்த கைக்குண்டை மீட்டுள்ளனர்.

இந்தக் கைக்குண்டு, கடந்த யுத்த காலப்பகுதியில் கைவிடப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதுடன், வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சேதன பசளை வேளாண்மை உருவாக்கம்

'ஓர் அரசியல் முடிவு அல்ல'

ஆளுநர் உறுதி

■ ஏ.எம்.ஏ.பரீட்

"முழுமையான சேதனப் பசளை கொண்ட வேளாண்மையாக இலங்கையை மாற்றுவதற்கான முடிவு, நாட்டை மனதில் கொண்டு எடுக்கப்பட்ட ஒரு மனிதாபிமான முடிவு" என்று கிழக்கு மாகாண ஆளுநர் அநுரதா யஹம்பத் தெரிவித்தார்.

சிலரின் கருத்துப்படி, அது அரசியல் நிகழ்ச்சி நிரல் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் இயற்கை பசளை வேளாண்மையை நடைமுறைப்படுத்துவதற்கான எதிர்காலத் திட்டங்கள் குறித்து விசேட கலந்துரையாடலொன்று, திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் நேற்று (16) நடைபெற்றது.

இதன்போது உரையாற்றுகையிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், கிழக்கு மாகாணத்தில், கடந்த சில பருவங்களில் பெரும் சவால்களுக்கு மத்தியில் இயற்கைப் பசளையைக் கொண்டு நெல் வளர்ப்பதில் நாங்கள் மிகவும் பிடிவாதமாக இருந்தோம். இந்த நாட்டை விஷம் இல்லாத தீவாக மாற்ற, கிழக்கு மாகாணத்திலிருந்து புதிய பயணத்தைத் தற்போது தொடங்கியுள்ளோம்.

இரசாயன உர பயங்கரவாதத்தை ஒழிக்க, ஜனாதிபதி எடுத்த முடிவு மிகவும் மதிப்புமிக்கது. எனவே, அதிகாரிகள் என்ற வகையில், ஜனாதிபதியால் எடுக்கப்பட்ட நடவடிக்கையை வலுப்படுத்த நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம் என்றார்.

நீராடச் சென்ற

குடும்பஸ்தரை காணவில்லை

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மலையாளபுரம், புதுஜயங்கன் குளத்தில் நீராடச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர், நேற்று முன்தினம் (15), நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

பொன்னகர் வடக்கு பகுதியைச் சேர்ந்த, 3 பிள்ளைகளின் தந்தையான முத்துலிங்கம் அருமைநாதன் (வயது 40) என்பவரே, இவ்வாறு நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

தனது பிள்ளையுடன் குளத்தில் நீராடிக்கொண்டிருந்த போது, அவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக, பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கையூட்டுப் பெற்ற

பொலிஸாருக்கு எதிராக விசாரணை

■ எம்.றொஷாந்த்

பயணக் கட்டுப்பாடு காலப்பகுதியில், அனுமதிப்பத்திரத்துடன் வியாபாரத்தில் ஈடுபட்ட மீன் வியாபாரி ஒருவரிடம் கையூட்டுப் பெற்ற கோப்பாய் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பில், யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கீழ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொரோனா தொற்றை அடுத்து விதிக்கப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடு காலத்தில், நடமாடும் மீன் வியாபாரிகளுக்கு, நல்லூர் பிரதேச செயலாளரால் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

அதனைப் பயன்படுத்தி மீன் வியாபாரித்தில் ஈடுபட்ட வியாபாரி ஒருவரை அச்சுறுத்திய கோப்பாய் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், அவரிடம் இருந்து கையூட்டுப் பெற்றுள்ளனர்.

பணத்தை வழங்கிய மீன் வியாபாரி, தனது பகுதி கிராம அலுவலகர் ஊடாக, நல்லூர் பிரதேச செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளார்.

இதையடுத்து, இச்சம்பவம் தொடர்பில் பொலிஸ் உயர்மட்டத்துக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் முதல் கட்டமாக, கையூட்டுப் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களை மீன் வியாபாரி அடையாளம் காட்டியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பிலான விசாரணைகள், யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கண்காணிப்பில் இடம்பெற்று வருகின்றன.

'எனது நிதியை மக்களுக்கு பகிர்ந்தளியுங்கள்'

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

இந்த வருடத்துக்கான பன்முகப்படுத்தப்பட்ட ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டை, வன்னி மாவட்டத்தில் பட்டினியில் வாழும் மக்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில், பிரதமருக்கு அவர், நேற்று (16) அனுப்பியுள்ள கடிதத்திலேயே, இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வருடாந்தம் அபிவிருத்தித் திட்டங்களுக்காக அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்படும் தலா ஒரு கோடி ரூபாய் நிதியை, வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

கட்டடங்களை அகற்றி

கடற்கரையை அழகுபடுத்தல்

■ அஸ்லம் எஸ்.மௌலானா

கல்முனை கடற்கரைப் பகுதியிலுள்ள கட்டடங்கள் அனைத்தும் அகற்றப்பட்டு, அப்பகுதியை பொதுமக்களுக்கான பொழுது போக்கிடமாக அழகுபடுத்தி, அபிவிருத்தி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலியின் ஏற்பாட்டில், பிரதேச செயலகத்தில் நேற்று (16) இடம்பெற்ற விசேட கூட்டத்தில், இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், கல்முனை மாநகர மேயர் ஏ.எம். றகீப், மாநகர ஆணையாளர் எம்.சி.அன்சார், மாநகர சபை உறுப்பினர்கள், பொறியியலாளர்கள் பங்கேற்றிருந்தனர்.

கல்முனை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கடற்கரைப் பிரதேசம் முழுவதையும் திறந்த வெளியாக மாற்றி, அழகுபடுத்தல், பூங்காக்கள், நடைபாதைகள், வாகனத் தரிப்பிடங்கள், பொழுதுபோக்கு அம்சங்களை ஏற்படுத்துவது குறித்து பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸால் முன்வைக்கப்பட்ட வேலைத்திட்ட முன்மொழிவு தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இத்திட்டத்துக்காக கல்முனை கடற்கரை வீதியில் இருந்து, கடல் பக்கமாக அமைந்துள்ள குடியிருப்புகள், வாடிகள், உணவகங்கள், கடைகள் உள்ளிட்ட அனைத்துக் கட்டடங்களையும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

'பெரும்பான்மையினர் சீனாவுடன் போராடுவர்'

■ நூருல் ஹுதா உமர்

"பெரும்பான்மையின மக்கள், சீனாவுக்கு எதிராகப் போராட வேண்டிய காலம் இனி வரும்" என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப்பேச்சாளர் சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்தார்.

கொழும்புத் துறைமுகத்தை 'சீன ஈழம்' என விழித்துள்ள அவர், கொழும்புத் துறைமுகத்தில் சீனாவுக்கு இடம்கொடுத்துள்ளமையால் இலங்கை வாழ் பெரும்பான்மையின மக்கள், சீனாவுக்கு எதிராகப் போராட வேண்டிய காலம், இனி வரும் எனவும் இனிமேல்தான் அதன் விளைவை இலங்கை அரசு அனுபவிக்கும் எனவும் தெரிவித்தார்.

அம்பாறை ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் (15) இரவு நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு ஊரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திருச்சி போராட்டத்துக்கு

யாழில் ஆதரவளித்து போராட்டம்

■ எம்.றொஷாந்த்

தமிழ்நாடு, திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற 78 இலங்கை தமிழர்களையும் விடுதலை செய்யக் கோரி, யாழ்ப்பாணம், நவாலியில், நேற்று (16) காலை 9 மணியளவில், கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றவர்களின் உறவினர்கள், தங்களது வீடுகளில், இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்களது உறவுகளை விடுதலை செய்யக் கோரி, தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலினிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்தோடு, குறித்த போராட்டமானது தமது உறவுகளை விடுதலை செய்யும் வரை தொடரும் எனவும், போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தடுப்பூசி செலுத்தும் வரை

‘கடமைகளுக்கு செல்ல மாட்டோம்’

மாத்தளை தபால் பணியாளர்கள் திட்டவட்டம்

■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை மாவட்டத் தபால் நிலையங்களில் பணியாற்றும் அலுவலக பணியாளர்களுக்கு, கொரோனா தடுப்பூசி செலுத்தும் வரை, மாவட்டத்தின் சகல தபால் நிலையங்கள் ஊடாகவும் முன்னெடுக்கப்படும் மருந்து விநியாகம் உள்ளிட்ட ஏனைய கடமைகளில் இருந்து, நேற்று முன்தினம் (15) முதல் விலகுவதாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக, தனது கையெழுத்துடனான கடிதத்தை, மாத்தளை பிரதேச தபால் அதிகாரியிடம் கையளித்துள்ளதாக, தபால் மற்றும் மின் தொடர்பு அதிகாரிகள் சங்கத்தின் மாத்தளை கிளையின் செயலாளர் சந்திக அமரகோன் தெரிவித்தார்.

கொரோனா தொற்று ஆரம்பித்த காலம் முதல் இன்று வரை, கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் தபால்மா அதிபரின் ஆலோசனைக்கமைய, அத்தியாவசிய மருந்து விநியோகத்தில் மாத்தளை மாவட்டத் தபால் பணியாளர்கள் ஈடுபட்டார்கள்.

அண்மையில், மாத்தளை மாவட்ட அரச பணியாளர்கள் 6,000 பேருக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், மாத்தளை மாவட்டத்தில் 110 பிரதான தபாலகங்கள், உப தபாலகங்கள் காணப்படும் நிலையில், இவற்றில் பணியாற்றும் ஒருவருக்கேனும் இத்தடுப்பூசி செலுத்தப்படவில்லை எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சமிக்ஞையைத் தேடி...

பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதால், இணையவழி ஊடாக மேற்கொள்ளப்படும் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக, நோட்டன் பிரிட்ஜ் பிரதேச மாணவர்களும் இணைய சமிக்ஞை கிடைக்கும் ஏழு கன்னியர் மலையை அண்மித்த பஸ் தரிப்பிடத்துக்குச் சென்று கற்கின்றனர். (எம். கிருஸ்ணா)

கொழும்பிலிருந்து கம்பளைக்கு

ஹெரோய்ன் கடத்தியவர் கைது

■ நவி

பயணக் கட்டுப்பாட்டுகளுக்கு மத்தியில், கொழும்பிலிருந்து கம்பளைக்கு ஹெரோய்ன் போதைப்பொருளை கடத்திய நபரொருவர், கம்பளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர் பயன்படுத்திய ஓட்டோவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபரிடமிருந்து 3 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கம்பளை, கங்கவிட்ட பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர் எவ்வாறு இந்த ஹெரோய்னை கொண்டு வந்தார் என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அனுமதியின்றி நுழைந்த

வாகனங்களைத் தேடிய ஹட்டன் பொலிஸார்

■ ரஞ்சித் ராஜபக்ஸ

பயணக் கட்டுபாடுகள் அமல்படுத்தப்பட்டுள்ள நிலையில், எவ்வித அனுமதிப்பத்திரங்களும் இன்றி, அத்தியாவசிய சேவை என்ற அட்டைகளைக் காட்சிப்படுத்தி, ஹட்டன் நகருக்குள் தினமும் வரும் வாகனங்களைத் தேடி, ஹட்டன் பொலிஸார், நேற்று (16) விசேட நடவடிக்கையொன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதற்கமைய, உரிய அனுமதிப்பத்திரங்கள் இன்றி நகருக்குள் வருகை தந்த வாகனங்கள் திருப்பி அனுப்பப்பட்டதுடன், வாகன சாரதிகளும் கடுமையாக எச்சரிக்கப்பட்டனர்.

தோட்டக் கம்பனிகளால்

‘தொழிலாளர்களுக்கு கெடுபிடிகள்’

■ ஆ.ரமேஸ்

தொழில் ரீதியான கெடுபிடிகளை, தொடர்ச்சியாக தொழிலாளர்களிடம் தோட்டக் கம்பனிகள் திணித்து வருவதாக கம்யூனிஸ்ட் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் சிரேஸ்ட சட்டத்தரணி எஸ்.மோகன்ராஜன் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பு கேள்விக்குறியாகவே காணப்படுகிறது. இந்த ஆயிரம் ரூபாய் தொடர்பான வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றில் கிடப்பில் இருக்கும் நிலையில், இவ்வாறு கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் நேற்று (16) அவர் வெளியிட்டுள்ள

ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில், எரிபொருள் விலையேற்றத்துடனான அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிப்பும் தோட்டத் தொழிலாளர்களுக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன், நாடு பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள நிலையில், அரசாங்கம் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளமையால், நாட்டு மக்கள் மேலும் கஷ்டப்படும் நிலைக்குச் செல்ல வேண்டியுள்ளது.

மேலும், எரிபொருள் விலை கட்டுப்பாடின்றி உயர்ந்துள்ள நிலையில், அத்தியாவசிய பொருள்களின் விலையும் எதிர்வரும் நாள்களில் அதிகரிக்கும் என்பதுடன், இவ்வாறான கட்டுப்பாடற்ற செயற்பாடுகளுக்கு அரசாங்கம் துணை போவதை கம்யூனிஸ்ட் தொழிலாளர் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

நுவரெலியாவில் சில இடங்களில்

நாளை மின்தடை

■ பீ.கேதீஸ்

நுவரெலியாவில் சில பகுதிகளில் 9 மணித்தியால மின்வெட்டு நாளை (18) அமல்படுத்தப்பட உள்ளதென இலங்கை மின்சார சபையின் நுவரெலியா கிளை அறிவித்துள்ளது.

இதற்கமைய, நாளை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை, லிந்துலை வைத்தியசாலை, லிந்துலை நகரம், லெமிலியர் தோட்டம், மட்டுகலை தோட்டம், சென்கூம்ஸ் தோட்டம், பாமஸ்டன் தோட்டம், கல்கந்தவத்த தோட்டம், சமர்செட், ரதல்ல, லேங்டேல், உடரதல்ல, வங்கிஓயா, சமர்செட் பங்களா ஆகிய பகுதிகளுக்கே இந்த மின்தடை அமல்படுத்தப்படவுள்ளது.

உப தபால் நிலையம்

திறப்பு விழாவில் மூடுவிழா கண்டது

■ க. மஹிந்தகுமார்

இரத்தினபுரி, தெனாகந்த பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள உப தபாலகமானது திறக்கப்பட்ட நாளிலிருந்தே மூடப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

தெனாகந்த, பம்பரலகந்த, மூக்குவத்த மேற்பிரிவு, கீழ் பிரிவு, வேவல்கெட்டிய ஆகிய ஆறு தோட்டங்களைச் சேர்ந்த மக்கள் பாவனைக்காக குறித்த உப தபால் நிலையம் நிர்மாணிக்கப்பட்டு, பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் பெ.சந்திரசேகரனால் 2003ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.

எனினும், அதன் பின்னர், இத்தபால் நிலையம் பயன்படுத்தப்படாமல் மூடி வைக்கப்பட்டு, தற்போது கட்டடம் சேதமடைந்து உடைந்து விழும் நிலைக்கு வந்துள்ளது.

எனவே, உப தபாலகம் ஒன்று இன்மையால் பிரதேச மக்கள் பாரிய சிரமங்களை எதிர்கொள்வதுடன், அவர்களுக்கான தபால், நேர்முகப் பரீட்சை தொடர்பான கடிதங்கள் உரிய நேரத்துக்குக் கிடைக்காமையால், பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்வதாகவும் இம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

‘எமக்கும் கொவிட் தடுப்பூசி வேண்டும்’

கூட்டுறவு பணியாளர்கள் கோரிக்கை

■ பீ.கேதீஸ்

கொவிட் -19 தடுப்பூசி வழங்கும் செயற்பாடு நாடுபூராகவும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், நாட்டிலுள்ள கூட்டுறவு பணியாளர்களுக்கும் இந்த விடயத்தில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென, நுவரெலியா மாவட்டக் கூட்டுறவு அமைப்பின் தலைவர் பெசில் சேனாதீர கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த பணியாளர்கள் தினமும் மக்களிடையே சேவைகளை முன்னெடுத்து வருவதால், இவர்களுக்கும் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வப்போது அரசாங்கத்தால் கொண்டுவரப்படும் பல்வேறு சட்டங்கள், ஒழுங்குமுறைகளுக்கு ஏற்பவும் அரசாங்கத்தின் தேவைக்காகவும் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நேரத்திலும் சேவைகளில் ஈடுபடுகின்றனர்.

எனவே, கூட்டுறவு பணியாளர்களுக்கும் தடுப்பூசி வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார.

தனிமைப்படுத்தலில் இருந்து

வட்டவளையில் மூன்று தோட்டங்கள் விடுவிப்பு

■ இரா. யோகேசன்

கடந்த மே மாதம் 21ஆம் திகதியிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டு இருந்த வட்டவளை-லொனக் தோட்டம் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதென, வட்டவளை பிரதேசத்துக்குப் பொறுப்பான பொதுச் சுகாதார அதிகாரி எஸ். காமதேவன் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வந்தவர்களால் குறித்த தோட்டத்தில் கொரோனா தொற்றுப் பரவியதையடுத்து, லொனக், மீனாட்சி தோட்டம், கிளார்மன்ட் ஆகிய தோட்டங்கள் தனிமைப்படுத்தப்பட்டன.

இதனால் இத்தோட்ட மக்கள் தமக்கான அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்தல் உள்ளிட்ட விடயங்களில் சிக்கலை எதிர்நோக்கியிருந்த நிலையில், நேற்று முன்தினத்திலிருந்து (15) மேற்படி பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

நடமாடும் வியாபாரியிடம் கைவரிசை

இளைஞர்கள் தலைமறைவாகினர்

■ சுமணசிறி குணதிலக

பிபிலை, யல்கும்புர பிரதேசத்தில் கெப் வாகனமொன்றில் நடமாடும் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த வியாபாரியிடமிருந்து 95,000 ரூபாய் பணம் கொள்ளையிடப்பட்டதாக பிபிலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (15) இடம்பெற்றதுடன், தனது வாகனத்தை வீதியோரமாக நிறுத்தி, வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த வேளை, அவ்விடத்துக்கு வருகை தந்த இளைஞர்கள் இருவர், வியாபாரியிடமிருந்து பணத்தைப் பறித்துச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்கான விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கல்வியமைச்சின் தூரநோக்கைத் துரிதமாக செயற்படுத்துவதே அவசியம்

பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கும் இக்காலப்பகுதிக்குள், கொரோனா வைரஸ் தொற்றை தடுத்தாற்கொள்வதற்கு, அரசாங்கத்தால் எடுக்கப்படும் செயற்பாடுகளையும் உள்ளூராட்சி மன்றங்களால் செயற்படுத்தப்படும் 'பழுதுபார்க்கும்' செயற்பாடுகளையும் பார்க்குமிடத்து, கொஞ்சமேனும் புகழாரம் சூட்டவேண்டும். ஆனாலும், அச்செயற்பாடுகளை இன்னும் திட்டமிட்டுத் துரிதப்படுத்தியிருக்கலாம் என்பதே பலரது கருத்தாகவுள்ளது.

இக்காலப்பகுதிக்குள் கொரோனா தடுப்பூசி செலுத்தும் செயற்றிட்டங்கள், நாடளாவிய ரீதியில் பரந்தளவில் முன்னெடுக்கப்பட்டன. அச்சமடைந்திருந்தவர்கள் கூட, தடுப்பூசியை செலுத்திக்கொண்டு, கொரோனாவுக்கு எதிராக நெஞ்சை நிமிர்த்தி நடந்து சென்றுள்ளனர். ஆக, மக்களிடமிருந்த மனப்பிராந்தி போக்கப்பட்டுள்ளது.

இன்னும் சில, பிரதேசங்களுக்கு தடுப்பூசியென்பது வெறும் வாய்ச்சொல்லாக மட்டுமே இருக்கிறது. நீண்ட வரிசையில் கால்கடுக்க நின்று கொண்டிருந்த பின்னரே, தடுப்பூசிகள் ஏற்றப்படுகின்றன. அதுவும் முதியோர்கள் எவ்விதமான பயண வசதிகளுமின்றி, நெடுந்தூரம் நடந்தே சென்று, தடுப்பூசிகளை செலுத்தியதன் பின்னர், நடந்தே திரும்பியுள்ளனர். ஒருசில பரோபகாரிகள், தங்களுடைய ஓட்டோக்களை இலவசமாக வழங்கியிருந்தனர்.

இதற்கிடையே பாடசாலை மாணவர்களுக்கும் தடுப்பூசி செலுத்தும் செயற்றிட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அவை வரவேற்கத்தக்கதாகும்.

மாணவர்கள் பலர், இணையவழி ஊடாகக் கற்கின்றனர்; இன்னும் சில பகுதிகளில், அதற்கான தூண்டுதல் கூட இல்லாமல் இருக்கிறது. இது கல்வியின்பால் மாணவர்கள் கொண்டிருக்கும் ஆர்வத்தை முழுமையாக மழுங்கடிக்கச் செய்துவிடும். ஆகையால், எவ்வளவு விரைவாக பாடசாலைகளைத் திறக்கமுடியுமோ, அதுவே சிறந்தது. இல்லையேல், கல்வியின் மீதான நாட்டமே இல்லாமற்போய்விடும்.

இரண்டு ஆண்டுகளாக, கொரோனா வீரியம் மிக்கதாய் உலாவுவதால், குறிப்பிட்ட சில நாள்கள் மட்டுமே, பாடசாலைகள் அதுவும் பேரச்சத்துடன் திறக்கப்பட்டன. இதில், மாணவர்கள்- ஆசிரியர்களுக்கு இடையிலான அந்நியோன்யம், பெரிதாக புலப்பட்டிருக்காது. முதலாம் தரத்துக்குச் சென்ற மாணவர்கள், பாடசாலைக்கு இரண்டொரு நாள்கள் மட்டுமே செல்லவேண்டும் என்ற நினைப்பிலேயே இருந்துவிடுவர்; இவையெல்லாம் களையப்பட வேண்டும்.

ஏககாலத்தில், பாடசாலைகளிலும், மாணவர் போக்குவரத்து வாகனங்களிலும் சுகாதார வழிமுறைகளைக் கடுமையாகப் பின்பற்றவேண்டும். அதனூடாக, பல கொத்தணிகள் ஏற்படுவதைத் தடுக்கமுடியும். சாக்குமூடைகளை ஏற்றிச்செல்வதைப் போல, பயணங்கள் அமையுமாயின், அடுத்தடுத்த கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதை தவிர்க்கமுடியாது. கட்டுப்பாடுகள் விதிக்கப்படுமாயின் கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிப்பது காலதாமதமாகும்; பரீட்சைகள் தாமதமாகும்; பெறுபேறுகளும் தாமதமாகும். இவையெல்லாம். தொழில்வாய்ப்புகளைத் தேடிச்செல்வதற்கான வயது வரம்பை மீறிவிடும். அது சாதாரண வாழ்க்கையோட்டத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி, ஒரு முதிர்வைக் காண்பித்துவிடும்.

ஆகையால், கல்விச்செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்காக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளைத் துரிதப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



வாழ்வியல் தரிசனம்

துன்பங்களை, இன்பங்களுக்குள் திணித்தலாகாது. சந்தோஷமான தருணங்களில் கூட, துன்பங்களை நினைத்து புலம்பிக்கொண்டிருக்கும் பிரகிருதிகள் ஏராளம் பேர் உண்டு.

துன்பங்களை, சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது எனப் பலர், தங்களின் மதிநுட்பத்தைப் பயன்படுத்துவார்கள்; ஆலோசனை செய்வார்கள். சிலர், இத்தகைய அணுகுமுறைகளை விட்டுவிட்டு, தமது மனம் போன போக்கின்படி, நடந்துகொள்வார்கள்.

எந்தவொரு மனிதனின் மனநிலை, எப்பொழுதும் ஒரே நிலையில் இருப்பதில்லை. அன்றாடம், சின்னச்சின்னப் பிரச்சினைகள் வரலாம்; அவற்றை ஊதிப்பெருப்பிப்பது அறிவீனம்.

உழைப்பற்ற வருமானங்கள் நிரந்தரமானவை அல்ல; வாழ்க்கையின் உச்சத்தைத் தொட்டவர்கள், மேலான கஸ்டங்களை அனுபவித்து, அதில் இருந்து மீண்டவர்களாகளே!

குறிப்பிட்டவர்களுக்கு என சோதனை வருவதில்லை. சோதனைகளுக்குள் மூழ்குவது வாழ்க்கை அல்ல; எல்லாமே புதியன அல்ல; புத்திசாலிகள், அறிவுத்திறன் உள்ளவர்கள், எதுநடந்தாலும் தொடர்ந்து, சிந்தித்து, சரியாகச் செயற்பட்டு, தங்கள் வழியில் செல்கிறார்கள். துணிவுதான் மனிதனை உருவாக்குகின்றது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

அஸ்தமனமானது 'முதலாவது' சரணாகதி

சின்னையா செல்வராஜ்

இதுவும் நடந்துவிடவேண்டுமென நினைத்திருந்தவர்களுக்குக் கசப்பாகவும் நடந்துவிடவே கூடாதென எண்ணியிருந்தோருக்கு திகைப்பூட்டியும், 'ஜனாதிபதி மாளிகை'யைக் களமாகக் கொண்டு, 'ஜனாதிபதிக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு'த் தொடர்பாக, ஜூன் 15ஆம் திகதி வெளிவந்த செய்திகள் அமைந்திருந்தன. அதுதான் 'முதல்' முறை என்றாலும், 'இறுதி'யாகி விடக்கூடாது என்பதே, பலரது கரிசனையுமாகும்.

ஜனாதிபதியுடனான சந்திப்புக்கு முன்னரான அறிவிப்புகள், ஜனாதிபதி செயலகத் தரப்பிலிருந்து விடுக்கப்படுவது அரிதாகும். இராஜதந்திர சந்திப்புகள் இடம்பெறுமாயின், அவை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். ஆனால், கூட்டமைப்புடனான சந்திப்புத் தொடர்பிலும், சந்திப்பு பிற்போடப்பட்டமை குறித்தும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பக்கத்திலிருந்தே செய்திகள் வெளிப்படுத்தப்பட்டன.

ஜனாதிபதித் தேர்தலையடுத்து, கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதியாக பதிவியேற்றதன் பின்னர், 69 இலட்சம் பெரும்பான்மை மக்களின் வாக்குளைப் பெற்று வெற்றியீட்டிய அதே உந்துதலுடன் தன்பயணத்தைத் தொடர்ந்த ஜனாதிபதி, சிங்கள பெரும்பான்மை மக்களின் மனங்களில் 'சிங்கம்' என இடம் பிடித்துக்கொண்டார்.

'நெல்லுக்கு இறைத்த நீர், வாய்க்கால் வழியோடி, புல்லுக்கும் பொசிவது போல்', அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் எந்தவொரு திட்டமாக இருந்தாலும், சிறுபான்மையினரின் பக்கமாகக் கடைக்கண் பார்வை மட்டுமே பார்க்கப்பட்டது.

அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள், நிவாரணக் கொடுப்பனவுகள் என்று எதுவாக இருந்தாலும் அவையெல்லாம், தென்னிலங்கையை மையப்படுத்தியே முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கின்றன.

சிறுபான்மை இனங்கள், பெரும்பான்மையாக வாழ்கின்ற வடக்கு, கிழக்கு மாகாணங்களில், அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் 2019ஆம் ஆண்டுக்குப் பின்னர், பெருமெடுப்பில் முன்னெடுக்கப்படவில்லை என்பதே பலருடைய குற்றச்சாட்டுகளாகும்.

பல்லினங்கள் வாழும் நாட்டில், சகலருக்கும் பொதுவானவராகவே ஜனாதிபதி இருத்தல் வேண்டும். கடந்த ஜனாதிபதித் தேர்தல்களில் முன்னிலையில் போட்டியிட்டவர்களும் வெற்றியீட்டியவர்களும், சிறுபான்மையின மக்களை ஓரங்கட்டிப் பார்க்கவில்லை.

அரசியல் கொள்கை கோட்பாடுகளின் பிரகாரமும் தேர்தல் விஞ்ஞாபனத்தைப் பொறுத்தும், அவற்றுக்கு ஆதரவானவர்களும் இருக்கலாம்; எதிரானவர்களும் இருக்கலாம். ஆனால், நாட்டுக்கு ஒருவரே ஜனாதிபதியாவார்.

கடந்த கால ஜனாதிபதிகள், அவ்வாறான பேதங்களை ஓரளவுக்கேனும் மறந்து செயற்பட்டனர். ஆனால், அவ்வாறான தோற்றப்பாட்டை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ காண்பிக்கவில்லை. இல்லையேல், சுற்றியிருக்கும் பரிவாரங்கள் அதற்கு இடமளிக்கவில்லை.

என்னதான் நிறைவேற்று அதிகாரத்தை ஜனாதிபதி கொண்டிருந்தாலும் 'ஜனாதிபதி' என்றொருவரால் மட்டுமே பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காணமுடியாது. அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்புக்கூறல், ஆளும் கட்சியின் ஒற்றுமை, பாராளுமன்றத்தின் அங்கிகாரம், மக்களின் ஆதரவு போன்றவை எல்லாம், ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்து இருக்கின்றன.

இவற்றுக்கு ஒருபடி மேலேசெல்ல வேண்டுமாயின், எதிர்க்கட்சியினரையும் அழைத்துப் பேசி, அவர்களின் ஆலோசனைகளையும் பெற்று, அரசியல் சுய இலாபத்துக்காக இல்லாது, நாடு, மக்கள், எதிர்கால சந்ததி ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, தீர்மானங்கள் எட்டப்படுமாயின், ஜனாதிபதி தனித்து நிற்கவேண்டியதில்லை.

விமர்சனங்களுக்குச் செவிசாய்க்காது, தான்தோன்றித்தனமாக, தன்னைச் சுற்றியிருக்கும் சிறு குழுவின் ஆலோசனைகளைப் பெற்று, அவ்வாறானவர்களை மட்டுமே திருப்திப்படுத்துவதற்கான முடிவுகள், கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாக வேண்டியதை தவிர்க்கவே முடியாது.

"பயங்காரவாதிகளைப் போல, கொரோனாவையும் நாட்டிலிருந்து துடைத்தெறிவோம்" என வீராப்பு வசனங்களைப் பேசி, தனிவழியில் சென்று, திக்குமுக்காட வேண்டிய நிலைமைக்கு அரசாங்கம் வந்துவிட்டது.

நானென்ன செய்வதெனக் கூறி, ஒரு நாட்டின் தலைவன் கைகளை விரித்துவிடமுடியாது; ஒவ்வொரு குடிமகனின் பொறுப்பாளியாக இருக்கவேண்டும். அதற்குத் தேவையான வகையில், நிர்வாகக் கட்டமைப்புகளை வகுத்துக்கொள்ளவேண்டும். எதிர்காலம் தொடர்பில் தீர்க்கதரிசனத்துடன் சிந்தித்து, முடிவுகளை எடுக்கவேண்டும்.

ஜனாதிபதி, பெரும்பான்மை வாக்குகளால் வென்றிருப்பதை மறுதலிப்பதற்கு இல்லை; அந்தச் சூட்டோடு சூடாக, தங்களுக்கு ஆதரவளிக்காத தரப்பு மக்கள் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி, அம்மக்களின் பிரச்சினைகளையும் செவிசாய்த்திருந்தால், அது சிம்மாசனத்தை மென்மேலும் அலங்கரித்திருக்கும்.

'சிங்கள-பௌத்த தலைவன்' என்ற நாமம் இல்லாது ஒழிந்துவிடுமோ என்றோர் அச்சம், ஜனாதிபதியிடம் குடிகொண்டிருக்கலாம். அதனால், தமிழ்ப் பிரதிநிதிகளுடனான சந்திப்பை, இதுவரை காலமும் தவிர்த்துவந்திருக்கலாம்.

நாட்டில் புரையோடிப்போய் இருக்கின்ற பிரச்சினையென்றால், இனப்பிரச்சினையை மட்டுமே கூறமுடியும். அப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான எந்தவொரு செயற்பாடும், புதிய ஜனாதிபதியின் கீழ் எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இதற்கிடையில், ஜனாதிபதிக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று நேற்று (16) ஏற்பாடாகியிருந்தது. எனினும், திகதி, நேரம் குறிக்கப்படாது அச்சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளது. அச்சந்திப்பு இடம்பெற்றிருந்தால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் த.தே.கூவுக்கும் இடையில் இடம்பெற்ற முதலாவது சந்திப்பாகப் பதியப்பட்டிருக்கும்.

புதிய அரசியலமைப்புக்கான யோசனைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2020 டிசெம்பர் அனுப்பி வைத்ததாகவும் அதன்பின்னர், 2021 பெப்ரவரியில், நிபுணர் குழுவை சந்தித்ததாகவும் குறிப்பிட்டிருந்த கூட்டமைப்பு, இதை முன்கொண்டு செல்வது சம்பந்தமாகவே ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது கலந்துரையாடப்படுமென கூறியது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அறிவிப்பை பார்க்குமிடத்து, இப்போதைய நிலைமையில் இது தேவைதானா என, உண்மையில் நினைக்கவைத்துவிட்டது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியை பலமுனைகளிலும் முன்னகர்த்தி, அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

இந்நிலையில், புதிய அரசியலமைப்பு யோசனை தொடர்பிலும் கட்டாயம் கதைத்தே ஆகவேண்டும். ஏனெனில், பயணக்கட்டுப்பாடுகள் எனக் கூறிக்கூறியே, தங்களுக்குத் தேவையானவற்றை இவ்வரசாங்கம் நிறைவேற்றிக்கொண்டுவிடும். ஆனால், அரசியலமைப்பு யோசனையை எடுத்த எடுப்பிலேயே நிறைவேற்றமுடியாது, அதற்கென சில படிமுறைகள் உள்ளன. எனவே, இப்போதைக்கு பேசவேண்டிய அதிமுக்கியமான விடயமாக அரசியலமைப்பு திருத்தம் இருந்துவிடமுடியாது.

கொரோனா தொற்றுக்காலத்தில், வடக்கு, கிழக்கு மக்களுக்கு கொரோனா தடுப்பூசியை விரைவாகப் பெற்றுக்கொடுப்பது தொடர்பிலும், பயணக்கட்டுப்பாடுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொறிமுறைகளை உருவாக்குதல் உள்ளிட்டவை தொடர்பில், ஜனாதிபதியுடன் பேசப்போகின்றோமென கூட்டமைப்பு அறிவித்திருக்குமாயின், ஜனாதிபதிக்கு ஆதரவான தரப்பும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு எதிரான தரப்பும் மௌமாய் இருந்திருக்கும். ஆனால், 'விடயம்' இனப்பிரச்சினைத் தீர்வோடு பயணப்பட்டதால், 'முதல் சந்திப்பு' வேண்டுமென்றே தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

'புலி முத்திரை' குத்தப்பட்டுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன், ஜனாதிபதி சந்தித்தித்தால், "புலிகளின் கால்களில் சரணடைந்த சிங்கம்" எனப் பிரசாரம் செய்வதற்கு, இனவாதத்தைக் கக்கிக்கொண்டிருக்கும் தென்னிலங்கை தரப்பின் வாய்களுக்கு, 'அவல்' போட்டதாய் அமைந்திருந்திருக்கும். அதேபோல, புலிகளின் போர்வைக்குள் இருந்து அரசியல் செய்யும் தமிழ்த்தரப்புகள், "சரணாகதி அரசியல் செய்யும் கூட்டமைப்பு" என பேரண்ட பிரசாரத்தில் குதித்திருப்பர்.

ஆக, சந்திப்புத் தொடர்பில், முன்தம்பட்டம் அடிக்காமல் மௌனம் காத்திருந்தால், கூட்டமைப்பின் அரசியலுக்கு அது அழகுசேர்த்திருக்கும். மக்களுக்கு அதிரடியாய்த் தேவையான விடயங்களை, ஜனாதிபதியின் நேரடிக் கவனத்துக்குக் கொண்டு சென்று, முடிந்தவற்றைப் பெற்றிருக்கலாம்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சியை கைவிடுமாறு கூறவில்லை; ஆனால், இடம், பொருள், ஏவல் அறிந்து, அரசியல் காய்களை நகர்த்தியிருக்க வேண்டும். அதில், கூட்டமைப்பு 'கூத்தாடி'விட்டது. முன்னரே கசியவிட்ட செய்தியால், கடும்போக்கு சிங்களத் தரப்புகள், 'சிங்கள-பௌத்த தலைவன்' என்பதை நினைவூட்டி, சந்திப்பை வேண்டுமென்றே பிற்போடும் அளவுக்கு, உள் அழுத்தங்களைக் கொடுத்திருந்திருக்கலாம்.

இல்லையேல், கூட்டமைப்புக்காக ஒதுக்கியிருந்த அந்த நேரத்தில், அவசரமாகத் தீர்க்கக்கூடிய பிரச்சினைகள் தொடர்பில், கலந்துரையாடுவதற்கான கூட்டமொன்றை நடத்தவேண்டி இருந்திருக்கும். ஆக, ஜனாதிபதியின் நாட்குறிப்பை மாற்றக்கூடிய அதியுச்ச அதிகாரம், அவரிடம் மட்டுமே உள்ளதென்பதை மறுதலிக்க முடியாது.

மிக நீண்ட நாள்களுக்குப் பின்னர், ஜனாதிபதி மாளிகையில் நேற்று (ஜூன் 16) நிகழவிருந்த அதிசயம், இறுதி செய்யப்படாது அஸ்தமனமாகி, மீண்டுமோர் உதயத்துக்கான திகதியோ நேரமோ குறிக்கப்படாது, விடப்பட்டுள்ளது எனக்கூறுவதில் தப்பேதும் இல்லை.

கடிதங்கள்

மேச்சல் தரவையை ஒதுக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, கேப்பாபுலவு பகுதியில் கால்நடை வளர்ப்பை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள குடும்பங்கள், கால்நடை வளர்ப்பை உரிய முறையில் முன்னெடுப்பதற்கு, கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவை இன்மை காரணமாக, பெரும் கஸ்டங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளன.

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கேப்பாபுலவு கிராமத்தில் வாழும் 59க்கும் மேற்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரமாக, கால்நடை வளர்ப்பே அமைந்துள்ளது. இப்பிரதேசத்தில், 6,000 தொடக்கம் 6,500 வரையான கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. இவற்றுக்கான மேய்ச்சல் தரவை இன்மையால், பயிர்ச் செய்கை காலங்களில், இக்கால்நடைகளில் பெரும்பாலானவற்றை குளங்களில் வைத்துப் பராமரிக்க வேண்டி உள்ளதுடன், பருவமழை பெய்து குளங்களில் நீர் நிறைந்தால், கால்நடைகளை குளங்களில் வைத்து பராமரிக்க முடியாது இருப்பதாகவும் நிரந்தரமாகக் கால்நடைகளைப் பராமரிக்க கூடிய வகையில், மேச்சல் தரவையை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழலில், சேதனப் பசளை உற்பத்தி, பால் உற்பத்தி என்பன பிரதானமாகக் கானப்படுவதால், கால்நடை வளர்ப்புக்கான மேச்சல் தரவையை ஒதுக்கித் தருமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

–யது பாஸ்கரன்

புதுடெல்லி

உருமாறிய கொரோனா

‘டெல்டா பிளஸ்’ ஆபத்தில்லை

கொரோனா வைரஸ் தொடர்ந்து உருமாறி வருகின்றன. இதேவேளை, இந்தியாவில் உருமாறிய கொரோனா வைரஸ்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

முதலில் இந்தியாவில் கண்டறியப்பட்ட ‘B.1.617.1’ வைரஸுக்கு ‘கொப்பா’ என்றும், ‘B.1.617.2’ வைரஸுக்கு ‘டெல்டா’ என்றும் உலக சுகாதார நிறுவனத்தால் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த டெல்டா வைரஸ்தான் இந்தியாவில் கொரோனாவின் இரண்டாவது அலைக்கு முக்கிய காரணமாக அமைந்தது.



உருமாறிய டெல்டா வைரஸ், ‘டெல்டா பிளஸ்’ என்று அழைக்கப்படுகிறது. இந்த புதிய உருமாறிய வைரஸ், கொரோனா வைரஸின் ஸ்பைக் புரதத்தில் ‘கே417என்’ பிறழ்வால் வகைப்படுத்தப்படுகிறது.

இதுபற்றி மத்திய அரசாங்கத்தால் தெரிவிக்கப்பட்டதாவது:

‘டெல்டா பிளஸ்’ வைரஸ் கடந்த மார்ச் மாதம் முதல் காணப்படுகிறது. அதே நேரத்தில் இந்த வைரஸ் இன்னும் கவலை தரக்கூடிய ஒன்றாக இல்லை. இந்த வைரஸ் பற்றி இன்னும் நாம் நிறைய அறிந்து, அதன் வீரியத்தை கண்காணிக்க வேண்டியிருக்கிறது.

அதேநேரத்தில், கொரோனா வைரஸ் பாதிப்பு நாட்டில் 85 சதவீத அளவுக்கு குறைந்து விட்டது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தூத்துக்குடி

கர்ப்பிணிக்கு கொரோனா தொற்று

‘ஒரே சூலில் 3 குழந்தைகள்’

தூத்துக்குடி அருகே கோரம்பள்ளம் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் கடந்த மே மாதம் நிறைமாத கர்ப்பமாக இருந்த நிலையில், அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இப்பெண்ணுக்கு, தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், ஒட்சிசன் மூலம் உயர் சிகிச்சை அளிக்கப்பட்டது.

கர்ப்பிணியின் கல்லீரல் பாதிப்படைந்ததால், குறித்த நாள்களுக்கு முன்பாகவே மே 30ஆம் திகதி அறுவை சிகிச்சை மூலம் குழந்தைகள் பிரசவிக்கப்பட்டன. அவருக்கு ஒரே நேரத்தில் 3 பெண் குழந்தைகள் பிறந்தன.

குழந்தைகள் முறையே 1.5, 1.75, 1.3 கிலோ கிராம் எடை கொண்டனவாக இருந்தன. முன்கூட்டியே

பிறந்ததாலும், எடை குறைவாக இருந்ததாலும் 3 குழந்தைகளும், தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டன.

கடந்த 15 நாள்களாக அரசு மருத்துவர்களின் தீவிர பராமரிப்பு, சிகிச்சைக்குப் பிறகு, குழந்தைகளின் எடை அதிகரிக்கத் தொடங்கியது. தாயும் நல்ல முறையில் குணமடைந்தார். இதையடுத்து தாயும் சேய்களும் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

செங்கல்பட்டு

மகளுக்கு பாலியல் தொல்லை:

வாலிபர் தந்தையால் அடித்துக்கொலை

மகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த வாலிபரை அவரது தந்தை இரும்புக் கம்பியால் தாக்கிக் கொலை செய்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

செங்கல்பட்டு, பரனூர் கிராமத்தைச் சேர்ந்த 15 வயது சிறுமி, வீட்டில் தனியாக இருந்தபோது, 25 வயது இளைஞனொருவன், பாலியல் தொல்லை கொடுத்துள்ளார்.

இது குறித்து தந்தையிடம் சிறுமி கூறியதை அடுத்து, இளைஞரிடம் இதுகுறித்துத் தந்தை கேட்டுள்ளார். இதில் வாக்குவாதம் ஏற்பட்டதால் இளைஞன் அங்கிருந்து தப்ப முயன்றுள்ளார். ஆத்திரமடைந்த தந்தை அவரை விரட்டிச் சென்று, இரும்புக் கம்பியால் தாக்கினார்.

இதில் படுகாயமடைந்து விழுந்த இளைஞனை, அவ்வழியே சென்றோர் மீட்டு, செங்கல்பட்டு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்க்க அழைத்து சென்ற நிலையில் அவர் இறந்துள்ளார்.

புதுடெல்லி

கொரோனா காரணமாக மூடப்பட்ட

தாஜ்மகால் திறக்கப்பட்டது

கொரோனா நோய் பரவல் காரணமாக தாஜ்மகால் உள்ளிட்ட பல்வேறு நினைவுச்சின்னங்களும் மூடப்பட்டன. கொரோனா தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி, தாஜ்மகால் திறக்கப்பட்டுள்ளது. தாஜ்மகாலுக்குள் ஒரேநேரத்தில் 650 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா இரண்டாவது அலையின்போது, மத்திய தொல்லியல்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்கள் மூடப்பட்டன. மத்திய தொல்லியல்துறையின் கட்டுப்பாட்டில் நாடு முழுவதும் உள்ள சுமார் 3,700 சுற்றுலா தலங்களும் மூடப்பட்டன.

இதற்கிடையில், வைரஸ் பரவல் கட்டுக்குள் வரத்தொடங்கி உள்ளதையடுத்து, மத்திய தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ள சுற்றுலா தலங்கள், வழிபாட்டு தலங்கள், நினைவுச்சின்னங்கள், அருங்காட்சியகங்கள் அனைத்தையும் நேற்று (16) முதல் திறக்க அனுமதி வழங்கப்பட்டது.

புதுடெல்லி

மத்திய அரசாங்கம்

‘டுவிட்டர்’ நிர்வாகத்துக்கு கடிதம்

சமூக ஊடக தளங்கள் தவறாக பயன்படுத்தப்படுவதை தடுக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து, ஆஜராகி விளக்கம் அளிக்கக்கோரி ‘டுவிட்டர்’ நிர்வாகத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்களை கட்டுப்படுத்தும் நோக்கத்தில் அமல்படுத்தப்பட்ட ஒழுங்குமுறை விதிகளுக்கு உட்பட்டு நடக்க அறிவுறுத்தி, டுவிட்டர் நிர்வாகத்துக்கு, மத்திய அரசாங்கம் சமீபத்தில் கடிதம் அனுப்பியது.

இந்நிலையில் தகவல் தொழில்நுட்பத் துறைக்கான பாராளுமன்ற நிலைக்குழு, டுவிட்டர் நிர்வாகத்துக்கு,

கடிதம் அனுப்பியது. தவிர பேஸ்புக் உள்ளிட்ட மேலும் பல சமூக ஊடகங்களுக்கும் கடிதம் அனுப்பி வைத்தது.

சமூக ஊடக தளங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதை தடுக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து, நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்கக் கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சென்னை

மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு:

சிவசங்கர் பாபா கைது

மாணவியரை பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கிய சிவசங்கர் பாபா தலைமறைவாக உள்ளார். அவரின் பாலியல் பலாத்காரம் தொடர்பான வீடியோ சிக்கியுள்ளதால் அவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சென்னையை அடுத்த கேளம்பாக்கத்தில் தனியார் பாடசாலையை நடத்தி வரும் சிவசங்கர் பாபா, அங்கேயே ஆச்சிரமமும் அமைத்துள்ளார். அவர், தான் நடத்தும் பள்ளியில் படிக்கும் மாணவியரை பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கினார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது.

குற்றச்சாட்டு தொடர்பாக பொலிஸார் கூறியதாவது: தந்தையை இழந்த ஏழைப் பிள்ளைகளை அவர்களின் தாயாருடன் சிவசங்கர் பாபா தன் ஆச்சிரமத்தில் சேர்த்து, அவர்களை அங்கேயே தங்க வைப்பார்.

அமாவாசை, பௌர்ணமி நாள்களில் நடக்கும் பூஜைகளில் இந்த மாணவியரை பங்கேற்க வைத்துள்ளார். அப்போது பாலியல் துன்புறுத்தல்கள் நடைபெற்றுள்ளன. பாபாவின் ஆசிரமத்தில் இருப்போர், பள்ளியில் படிக்கும் மாணவியர் ஆகியோருக்கு, “பாபா தான் எல்லாமே; எதைச் செய்தாலும், அது உங்கள் நன்மைக்கானது; பாபா மட்டுமே உங்களுக்கான கடவுள்” என்று போதித்து ஏமாற்றியுள்ளனர்.

இதனால், பாலியல் ரீதியாக பாபா தொந்தரவு கொடுத்த போதெல்லாம், ‘கடவுள் எமக்குச் செய்யும் நன்மை’ என்று கருதி, பலரும் அதை வெளியில் சொல்லாமல் இருந்துள்ளனர்.

டேராடூனில் தலைமறைவாகி இருந்த பாபாவை பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தெரிவித்தனர்.

பெரியநீலாவணை தொடர்மாடி:

‘வட்ஸ்’ அமைப்பால் 600 உலர் உணவுப் பொதிகள்

பெரியநீலாவணை தொடர்மாடியில் வசிக்கும் மக்களுக்கு, மட்டக்களப்பு ‘வட்ஸ்’ அமைப்பின் ஏற்பாட்டில், இலண்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் ‘வட்ஸ்’ அமைப்பின் நிதி உதவி மூலம், 600 பேருக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைக்கும் நிகழ்வு, நேற்று (16) ‘வட்ஸ்’ அமைப்பின் பெரியநீலாவணைக்கான இணைப்பாளர் திருமதி பிரியதர்ஷினி நரேஸ் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, ஒவ்வொரு குடும்பத்துக்கும் 1,250 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன. இப்பொதிகளை அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் ஜெகதீசன், கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலாளர் அதிசயராஜ், அபிவிருத்தி உத்தியோகத்தர் தர்மலிங்கம், பிரதேச கிராமசேவை உத்தியோகத்தர் கேதீஸ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

எஸ். சபேசன்

பவர் ஒப் ஏஞ்சல் அமைப்பு:

தெரணியகல - கேல்வல தோட்டத்தில் 25 குடும்பங்களுக்கு உதவி

தெரணியகல– கேல்வல தோட்டத்தில் வறுமையால் பாதிக்கப்பட்ட 25 குடும்பங்களுக்கு, ‘பவர் ஒப் ஏஞ்சல்’ அமைப்பின் இலங்கைக்கான பொறுப்பாளர் திருமதி ராம்குமாரால் உலர் உணவுப்பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

வருமானத்தை இழந்த குடும்பங்களுக்கு த.ம.கூ உதவிக்கரம்

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பாரதிபுரம், மலையாளபுரம், கோணாவில் கிழக்கு, செல்வாநகர், திருவையாறு, பரந்தன், பிரமந்தனாறு, கல்லாறு, சாந்தபுரம், அம்பாள் குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட மக்களுக்கு, தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி. விக்னேஸ்வரனுடன் இணைந்து கட்சி உறுப்பினர்கள், வாழ்வாதாரத்துக்குத் தேவையான பொருட்களை வழங்கி வைத்தனர். நீதியரசரின் தனிப்பட்ட நிதியிலிருந்தும் சிட்னி தமிழ் உறவுகள் வழங்கிய நிதிப் பங்களிப்புகள் மூலமும் இந்த நிவாரண உதவி முன்னெடுக்கப்பட்டது.

திருமுறிகண்டி பிள்ளையார் கோவில் நிதி:

600 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள, திருமுறிகண்டிப் பிள்ளையார் கோவில் வருமானத்தில் இருந்து, பத்து இலட்சம் ரூபாய் பெறுமதியில் 600 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. திருமுறிகண்டி கிராம அலுவலர் பிரிவில் 400 குடும்பங்களுக்கும் இந்துபுரம் கிராம அலுவலர் பிரிவில் 200 குடும்பங்களுக்குமாக இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. ஒட்டுசுட்டான் உதவி பிரதேச செயலாளர் இ. றமேஷ், ஒட்டுசுட்டான் பிரதேச இந்து கலாசார உத்தியோகத்தர் சி. மோகனராசா, திருமுறிகண்டி பிள்ளையார் கோவில் குரு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலக ஊழியர் ஆகியோரால் இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

சண்முகம் தவசீலன்

நொச்சிக்குளம், முதலிக்குளம், சாந்திபுரம் கிராமங்கள்:

பெண்கள் தலைமைத்துவ 100 குடும்பங்களுக்கு உதவி

திருகோணமலை மாவட்ட பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான அமையத்தின் ஸ்தாபகரும் கன்னியா வெந்நீர் ஊற்று சிவன் கோவில் அறங்காவலர் சபையின் பொருளாளருமான கனகசபை தேவகடாட்சம், சுவிஸ் நாட்டில் வாழும் தனது நட்பு வட்டத்தின் உதவியுடன், பெண்கள் தலைமை தாங்கும் 100 குடும்பங்களுக்கு, உலர் உணவுப் பொதிகளை வழங்கிவைத்தார். இந்த உணவுப்பொதிகள், பெரியகுளம், பன்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நொச்சிக்குளம், முதலிக்குளம், சாந்திபுரம் ஆகிய கிராம பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

அ . அச்சுதன்

தலைமுறை காப்போம் அமைப்பு:

லெவண்ட் தோட்ட மக்களுக்கு நிவாரணம்

மண்சரிவு அபாயத்தால் தற்காலிக கூடாரத்தில் வசிக்கும் எட்டியாந்தோட்டை லெவண்ட் தோட்ட மக்களுக்கு, கேகாலை மாவட்டத்தில் இயங்கி வரும் ‘தலைமுறை காப்போம்’ அமைப்பு, நிவாரணங்களை வழங்கி வைத்தது.

இரா. கமல்

பலஸ்தீனம்

நெருப்பு பலூன்கள்:

ஹமாஸ் நிலைகளை தாக்கிய இஸ்ரேல்

காஸாவில் உள்ள ஹமாஸ் நிலைகளை இஸ்ரேலிய விமானம் நேற்று (16) தாக்கியுள்ளது.

பலஸ்தீனத்திலுள்ள காஸாவிலிருந்து நெருப்பு பலூன்கள் ஏவப்பட்டதை அடுத்தே இத்தாக்குதல் நிகழ்ந்துள்ளது.

கடந்த மாத 11 நாள் மோதலை முடிவுக்கு கொண்டு வந்த யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு பின்னரான முதலாவது தாக்குதல் இதுவாகும்.

எவ்வாறெனினும், இரண்டு தரப்புகளிலும் உயிரிழப்புகள் ஏற்பட்டதாக அறிக்கைகள் எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

காஸா நகரத்திலுள்ள, தென் நகரிலுள்ள ஹமாஸின் ஆயுத வளாகங்களை தமது விமானம் தாக்கியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

காஸா எல்லைக்கு அருகிலுள்ள சமூகங்களிலுள்ள திறந்த வெளிகளில் 20 தீப்பிழம்புகளை நெருப்பு பலூன்கள் ஏற்படுத்தியதாக இஸ்ரேலிய தீயணைப்பு படை தெரிவித்துள்ளது.

யூரோ கிண்ணத் தொடர்:

ஜேர்மனியை வென்ற பிரான்ஸ்

யூரோ கிண்ணத் தொடரில், ஜேர்மனியில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணிக்கும், பிரான்ஸுக்கும் இடையிலான போட்டியில், 1-0 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் வென்றது.

பிரான்ஸுக்கு கிடைத்த கோலானது ஒவ்ண் கோல் முறையில் கிடைக்கப் பெற்றிருந்தது.

இதேவேளை, ஹங்கேரியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல் வென்றது. போர்த்துக்கல் சார்பாக, கிறிஸ்டியானோ ரொனால்டோ இரண்டு கோல்களையும், ரபேல் குரைரோ ஒரு கோலையும் பெற்றனர்.

ஐ. அமெரிக்கா

ஆர்ப்பாட்டக்காரர்களை கார் மோதியதில்

தாய் கொல்லப்பட்டார்

ஐக்கிய அமெரிக்காவின் மினியோஸ்டாவின் மினியாபொலிஸில், ஆர்ப்பாட்டமொன்றில் தனது கார் இன்னொரு வாகனத்தால் மோதப்பட்ட நிலையில் பெண்ணொருவர் மரணித்துள்ளார்.

> **ஆர்ப்பாட்டக்காரர்களுக்காக வீதியொன்றைத் தனது காரால் முடக்கியவாறு குறித்த பெண் காணப்பட்ட நிலையிலேயே, அவரது காரை இன்னொரு வாகனம் மோதியுள்ளது**

ஆர்ப்பாட்டக்காரர்களுக்காக வீதியொன்றைத் தனது காரால் முடக்கியவாறு குறித்த பெண் காணப்பட்ட நிலையிலேயே, அவரது காரை இன்னொரு வாகனம் மோதியுள்ளது.

சம்பவ இடத்திலேயே சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில், அவரது நோக்கம் தெளிவில்லாமலுள்ளது.

குறித்த பெண் தவிர வேறொருவர் காயமடைந்துள்ளார்.

இந்நிலையில், கறுப்பினத்தவர் கொல்லப்பட்டதற்கு மேலதிக ஆதாரத்தைக் கோரியே செயற்பாட்டாளர்களால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருந்தது.

தாய்வான்

சீன விமானப் படையின் பாரிய ஊடுருவல்

தாய்வானின் வான் பாதுகாப்பு அடையாளப்படுத்தல் வலயத்துக்குள் நேற்று முன்தினம் 28 சீன விமானப் படை விமானங்கள் நுழைந்ததாக தாய்வான் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதில், தாக்குதல் விமானங்களும், அணு குண்டை வீசக்கூடிய குண்டு வீச்சு விமானங்களும் உள்ளடக்கம் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரையிலான பாரிய ஊடுருவலாக இது கருதப்படுகிறது.

இந்நிலையில், உடனடியாக கருத்து எதனையும் சீனா தெரிவித்திருக்கவில்லை.

இதேவேளை, சீன விமானங்களை இடைமறித்து எச்சரிக்க, தாய்வான் சண்டை விமானம் அனுப்பப்பட்டதாக தாய்வான் பாதுகாப்பமைச்சு தெரிவித்ததுடன், ஏவுகணை கட்டமைப்புகளும் கண்காணிக்க தரையிறக்கப்பட்டதாகக் கூறியுள்ளது.

அவுஸ்திரேலியா

விலையுயர்ந்த உலோக விலையேற்றத்தால்

கார்களின் பெற்றோல் எரியிகள் திருட்டு

கார்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை அதிகரிக்குமாறு தென் அவுஸ்திரேலியாவிலுள்ள பொலிஸார், ஓட்டுநர்களை நேற்று (16) வலியுறுத்தியுள்ளனர்.

பெற்றோல் எரியிகளை திருடர்கள் இலக்கு வைக்கின்ற நிலையிலேயே குறித்த அறிவித்தல் வெளிவந்துள்ளது.

விலையுயர்ந்த உலோகங்களுக்கான விலைகள் அதிகரித்துள்ள நிலையில். பிளாட்டினத்தின் விலையானது ஓராண்டில் 38 சதவீதமான அவுண்ஸ் ஒன்றுக்கு 1,173 அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதுடன், பல்லடியமானது 43 சதவீதத்தால் அவுண்ஸ் ஒன்றுக்கு 2,758 அமெரிக்க டொலர்களால் அதிகரித்துள்ளது.

மேற்கிந்திய, பங்களாதேஷ் சுற்றுப் பயணங்களில்

கமின்ஸ், வோர்னர், மக்ஸ்வெல் இல்லை

மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷுக்கான அவுஸ்திரேலியாவின் சுற்றுப் பயணங்களில் பற் கமின்ஸ், டேவிட் வோர்னர், கிளென் மக்ஸ்வெல் உள்ளிட்ட ஆறு வீரர்கள் பங்கேற்கவில்லை.

இதேவேளை, முழங்கை காயம் காரணமாக இச்சுற்றுப் பயணங்களை ஸ்டீவ் ஸ்மித் தவற விடுகின்றார்.

இந்நிலையில், மேற்குறிப்பிட்ட வீரர்கள் தவிர ஜஹை றிச்சர்ட்ஸன், கேன் றிச்சர்ட்ஸன், மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் ஆகியோரும் இச்சுற்றுப் பயணங்களில் வெவ்வேறுபட்ட தனிப்பட்ட காரணங்கள் காரணமாக பங்கேற்கவில்லை.

இதேவேளை, இச்சுற்றுப்பயணங்களில் பங்கேற்பதிலிருந்து டேனியல் சாம்ஸ் முதலே விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், முதற் தடவையாக அவுஸ்திரேலியக் குழாமுக்கு வேகப்பந்துவீச்சாளர் வெஸ் அகர் அழைக்கப்பட்டுள்ளார். தவிர, டான் கிறிஸ்டியன், பென் மக்டர்மூட் ஆகியோரும் குழாமுக்கு மீள அழைக்கப்பட்டுள்ளனர்.

குழாம்: ஆரோன் பின்ஞ் (அணித்தலைவர்), அஸ்தன் அகர், வெஸ் அகர், ஜேஸன் பெஹ்ரென்டோர்ஃப், அலெக்ஸ் காரி, டான் கிறிஸ்டியன், ஜொஷ் ஹேசில்வூட், மொய்ஸஸ் ஹென்றிக்கஸ், மிற்செல் மார்ஷ், றிலே மெரெடித், பென் மக்டர்மூட், ஜொஷ் பிலிப், மிற்செல் ஸ்டார்க், மிற்செல் ஸ்வப்ஸன், அஸ்தன் தேணர், அன்றூ டை, மத்தியூ வேட், அடம் ஸாம்பா.

இந்தியக் குழாமில் தாக்கூர் இல்லை

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான இந்தியக் குழாமில் வேகப்பந்துவீச்சாளர் ஷர்துல் தாக்கூர் இடம்பெறவில்லை.

இந்நிலையில், குழாமில் ஹனும விஹாரி, ரித்திமான் சஹாவும் இடம்பெற்றுள்ள நிலையில், வொஷிங்டன் சுந்தர், அக்ஸர் பட்டேல், மாயங்க் அகர்வால், லோகேஷ் ராகுல் ஆகியோர் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: ரோஹித் ஷர்மா, ஷுப்மன் கில், செட்டேஸ்வர் புஜாரா, விராட் கோலி (அணித்தலைவர்), அஜின்கியா ரஹானே, ஹனும விஹாரி, றிஷப் பண்ட் (விக்கெட் காப்பாளர்), ரித்திமான் சஹா (விக்கெட் காப்பாளர்), இரவிச்சந்திரன் அஷ்வின், இரவீந்திர ஜடேஜா, ஜஸ்பிரிட் பும்ரா, இஷாந்த் ஷர்மா, மொஹமட் ஷமி, உமேஷ் யாதவ், மொஹமட் சிராஜ்.

நியூசிலாந்துக் குழாமில் அஜாஸ் பட்டேல்

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான நியூசிலாந்துக் குழாமில் அஜாஸ் பட்டேல் இடம்பெற்றுள்ளார்.

அந்தவகையில், இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான நியூசிலாந்துக் குழாமில் இருந்த டெளஃப் பிறேஸ்வெல், ஜேக்கப் டஃபி, டரைல் மிற்செல், றஷின் றவிந்தீரா, மிற்செல் சான்ட்னெர் ஆகியோர் மேற்படி குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: கேன் வில்லியம்ஸன் (அணித்தலைவர்), டொம் பிளண்டெல், ட்ரெண்ட் போல்ட், டெவோன் கொன்வே, கொலின் டி கிரான்ட்ஹொம், மற் ஹென்றி, கைல் ஜேமிஸன், டொம் லேதம், ஹென்றி நிக்கொல்ஸ், அஜாஸ் பட்டேல், டிம் சௌதி, றொஸ் டெய்லர், நீல் வக்னர், பி.ஜெ. வட்லிங்க், வில் யங்க்.

ச. அரேபியா

பதின்ம வயது குற்றங்களுக்காக

நபரொருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றம்

17 வயதாகும்போது புரிந்ததாக, மனித உரிமைகள் தெரிவிக்கும் குற்றங்களுக்காக நபர் ஒருவருக்கு சவுதி அரேபியா மரண தண்டனையை நிறைவேற்றியுள்ளது.

பதின்ம வயதினருக்கு மரண தண்டனையை ஒழித்துள்ளதாக ச. அரேபியா உறுதியளித்துள்ளது.

குறித்த நபர், கடந்த 2015ஆம் ஆண்டு ஆர்ப்பாட்டம் தொடர்பான குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், பயங்கரவாத குழு ஒன்றை உருவாக்கியதாகவும், ஆயுதப் புரட்சி ஒன்றை நடத்த முயன்றதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்ததாக சவுதி அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

காபூல்

தடுப்பூசி குழு உறுப்பினர்கள் சுட்டுக்கொலை

ஆப்கானிஸ்தானில் காலூன்றி வரும் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு, போலியோ தடுப்பூசி குழுவின் உறுப்பினர்களை குறிவைத்து தொடர் தாக்குதல்களை நடத்தி வருகிறது. உலகிலேயே ஆப்கானிஸ்தான் மற்றும் அதன் அண்டை நாடான பாகிஸ்தான் ஆகிய 2 நாடுகளில் மட்டுமே போலியோ நோய் பாதிப்பு இன்னமும் இருந்து வருகிறது.

இதனால் ஆப்கானிஸ்தான் அரசு ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான குழந்தைகளுக்கு போலியோ தடுப்பூசியை செலுத்தி வருகிறது.

இதனிடையே ஆப்கானிஸ்தானில் காலூன்றி வரும் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு, போலியோ தடுப்பூசி குழுவின் உறுப்பினர்களை குறிவைத்து தொடர் பயங்கரவாத தாக்குதல்களை நடத்தி வருகிறது.

செல்வும் மெம்பிஸ் டீபே?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவால் கைச்சாத்திடப்படுவதை பிரெஞ்சு லீக் 1 கழகமான லயோனின் முன்களவீரரான மெம்பிஸ் டீபே நெருங்கியுள்ளார்.

இம்மாத முடிவுடன் லயோனுடனான 27 வயது டீபேயின் ஒப்பந்தம் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

பார்சிலோனாவின் முகாமையாளராக ரொனால்ட் கூமன் கடந்த பருவகாலத்தில் நியமிக்கப்பட்டது முதல் டீபேயை கைச்சாத்திட பார்சிலோனா முயல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 17 ஜூன் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.